Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 033 | செவ்வாய்க்கிழமை | மார்கழி 14 ஆம் நாள் 29 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## இணுவிலில் ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், டிசெ.29

இணுவிலைச் சேர்ந்த ஒருவருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட 19

## புதிய வைரஸுடன் இலங்கையில் இருவர்

கொழும்பு, டிசெ. 29

பிரிட்டனில் தீவிரமடையும் புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான இருவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 6 பேர் பிரிட்டனிலிருந்து நாடு திரும்பியிருந்தனர். பிரிட்டனுக்கான விமான சேவை 14



## ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறையில் இருந்து மீட்போம்!!!

### நல்லூரில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 29

சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி நல்லூரில் 19

# வடக்கு - கிழக்கு தனிப் பிராந்தியம்

## புதிய அரசமைப்புத் தொடர்பில் கூட்டமைப்பு யோசனை முன்வைப்பு

கொழும்பு, டிசெம்பர் 29

புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு, கிழக்கு இருத்தல் வேண் 19

## நள்ளிரவில் வீடு புகுந்து நகை, பணம் கொள்ளை

### சுழிபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.29

சுழிபுரத்தில் வீடொன்றுக்குள் புகுந்த 3 பேர் கொண்ட குழு வீட்டில் 19

## காய்ச்சல், வாந்தி ஏற்பட்டு இளம் யுவதி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.29

திடீரென காய்ச்சல், வாந்தி ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். 19



உக்ரேன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நேற்றுக் காலை இலங்கைக்கு வந்தனர். அவர்களுக்கு மேள தாளங்கள் சகிதம் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

விரிவு -3ஆம் பக்கம்

## கடற்படையினர் எனக்கூறி அனலைதீவில் கொள்ளை!

### மூவர் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணம் அனலைதீவில், நள்ளிரவில் வீடு புகுந்து கத்தியைக் காட்டி கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் 14

## தீயில் எரிந்த மஞ்சள்!



மன்னார், டிசெ. 29

இந்தியாவிலிருந்து மன்னாருக்கு கடத்தப்பட்டு, பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 532 கிலோ மஞ்சள் கட்டிகள் நேற்றுத் தீயிட்டு அழிக்கப்பட்டன. 19

## ஊடக அடக்குமுறைக்கு எதிராகத் திரளுங்கள்!

### மங்கள சமரவீர அழைப்பு



கொழும்பு, டிசெ.29

ஜனநாயகத்தையும் நாட்டையும் காப்பாற்ற ராஜபக்ச அரசால் அரங்கேற்றப்படும் ஊடக அடக்கு முறைகளுக்கு எதிராகக் கட்சி பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

இவ்வாறு அழைப்பு 19

## தாயும் 3 வயது குழந்தையும் கிணற்றில் வீழ்ந்து சாவு!





வவுனியா, டிசெ. 29

வவுனியா பறண்நட்டகல் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து குடும்பப் பெண் ஒருவரும், அவரது மூன்று வயதுப் பெண் குழந்தையும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் 14

## ரெலோவுக்கு நல்லூர்; தமிழரசுக்கு கோப்பாய்!

### தூசுதட்டப்பட்ட 'டீல்'

யாழ்ப்பாணம், டிசெ.29

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை தவிசாளர் பதவியை தமிழ் 19

## தமிழருக்கான குரலை நசுக்குவதற்கு முயற்சி

### தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ.29

"உதயனை" அழிப்பதற்குப் பேரினவாத சக்திகள் பலமுறை முயற்சித்தமை மறுக்க முடியாத உண்மை. தற்போது "உதயன்" மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் முடிவும் அதன் இன்னொரு வடிவமே. இது கண்டிக்கப்பட்ட வேண்டியது. இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

# அரசியற் கைதிகளின் விடுதலைக்கு ஓரணியில் ஒன்றிணைந்து செயற்படுக

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கோரிக்கை விடுப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 29**

**அரசியற் கைதிகளின் விடுதலைக்காக தமிழ்க் கட்சிகள், மத நிறுவனங்கள், பொது அமைப்புகள் என அனைத்துத் தரப்பினரும் ஒரே அணியாக ஒன்றிணைந்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிமையான ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**



இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சகல தரப்பினரும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும்படி கோரி தமிழ்த் தலைமைகளிடம் 'குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் பேச்சுகளை நடத்திவருகின்றனர். இதற்கு முன்னர் இந்த வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் நீதியமைச்சரும், பிரதமரும் உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றோம் என வாக்குறுதியளித்திருந்த போதிலும் அவ்விடயம் தொடர்பாக இதுவரை ஒரு சிறு நகர்வுகூட மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

14 அரசியற் கைதிகள் கொரோனா தொற்றுக்கு இதுவரை உட்பட்டுள்ளனர்.

அண்மையில் கொரோனா பரவல் காரணமாகவும் சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடியைக் குறைக்கும் வகையிலும் 8 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டு அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ் அரசியற் கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை. இது பிரதமர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோரின் வாக்குறுதிகளின் போலித்தன்மையை வெளிப்படுத்துகின்றது. எனவே பேச்சுகளை நடத்துவதும் கோரிக்கைகளை முன்வைப்பதும் போதுமானவையல்ல என்பதையும் மேலதிகமாக அவை தொடர்பான பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டுமென்பதையும் இச் சம்பவங்கள் எம்மை உணர வைக்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும் நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகலாம். அவற்றைச் சமாளிக்க இலங்கை அரசாங்கம் சில கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அப்படியான நடவடிக்கைகளில் ஒன்றுதான் அடுத்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தப் போவதான அரசாங்கத்தின் அறிவிப்பாகும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நாம் வலிமையான போராட்டங்களை முன்னெடுத்தால் சர்வதேச அரங்கில் தங்களை நியாயப்படுத்தவாவது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்புகள் ஏற்படும்.

இவை வெறும் அறிக்கைகளாகவோ அல்லது நாடாளுமன்ற உரைகளாகவோ மட்டும் மட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு இருப்பதில் பயனில்லை. எனவே தமிழ்க் கட்சிகள், மத நிறுவனங்கள், பொது அமைப்புகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒரே அணியாக ஒன்றிணைந்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிமையான ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

கடந்த காலத்தில் காணாமல் போனோர் தொடர்பாக போராட்டங்களில் தமிழ்த் தலைமைகள் காட்டிய அசமந்தப் போக்குக் காரணமாக அவர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் ஊடுருவிய தமிழ்த் தேசிய விரோத சக்திகள் இன்று காணாமல் போனோரில் உறவுகளில் ஒரு பகுதியினரை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராக அறிக்கைகளை விடவும் ஊடகச் சந்திப்புகளை நடத்துவதுமான முறையிலும் வழிநடத்தி வருகிறார்கள் என்பதை நாம் கவனத்திலெடுக்காமல் விட முடியாது.

வெறும் வாதப்பிரதிவாதங்களிலும், ஒருவரையொருவர் சாடும் அறிக்கைகளிலும் தங்கி நிக்கும் 'அப்புக்காத்து அரசியலை' புறந்தள்ளி எமது அரசியல் தலைமைகள் இனியாவது மக்கள் மயப்பட்ட அர்ப்பணிப்புடனான அரசியலில் இறங்க வேண்டும். அத்தகைய ஒரு நிலையை உருவாக்குவதில் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு இறங்கியுள்ளமை ஒரு நல்ல அறிகுறியாகும்.

கடந்த காலங்களில் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பாக அக்கறை காட்டியவன் என்ற வகையிலும் அவர்களின் நலன்கள் தொடர்பாக முடிந்தளவு முயற்சிகளை மேற்கொண்டவன் என்ற வகையிலும் எமது தமிழ்த் தேசியத் தலைமைகள் பொது நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து ஒரே அணியில் நின்று குரலற்றவர்களின் குரல் இதயமற்றவர்களின் செவிகளைத் திறக்கும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன்என்றுள்ளது. (மஇ)



## ஜனாஸா எரிப்புக்கு எதிராக யாழ். நகரில் போராட்டம்

கொழும்பு, டிசெ. 29

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதைக் கண்டித்து யாழ்ப்பாண நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், மற்றும் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஒ,20)

## உதயன் மீதான வழக்கு; ஊடக சுதந்திரம் கேள்விக்குறி

கிளிநொச்சி, டிசெ. 29

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை பிரசுரித்தமைக்காக உதயன் பத்திரிகை மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருப்பது ஊடக சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவ்வாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் எதிர்காலத்தில் தங்கள் ஊடகப் பணியை சுதந்திரமாக முன்னெடுப்பதைத் தடுப்பதற்கான எச்சரிக்கையாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

உதயன் பத்திரிகை மீது அரசால் கடந்த காலங்களில் அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு வந்தாலும், உதயன் அந்த அடக்குமுறைகளை அத்திவாரங்கள் ஆக்கி நிமிர்ந்து நிற்கின்றான்.



ஆட்சியில் உள்ள அரசு தமிழர்களின் ஜனநாயாயக ரீதியான போராட்ட நியாயப்பாட்டை சிதைக்க வேண்டுமானால் உதயன் என்கிற தமிழர்களின் குரலை நசுக்க வேண்டும் என்கின்ற முடிவை எடுத்துள்ளார்கள் போல் உள்ளது. உண்மையில் இம் முடிவு மக்கள் ஆட்சி மற்றும் நல்லாட்சி தத்துவத்தை மீறும் செயல். இந்த நாட்டில் மக்களின் ஊடக சுதந்திரம் நசுக்கப் படுகின்றது என்பதை வெளிக்காட்டும் ஒரு செயல். சம்மந்தப்பட்ட தரப்புக்கள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கு எனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ,6)

## மாவட்ட காணி பதிவுகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு, நாளை 30 ஆம் திகதி மதியம் 12 மணியுடன் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீடக் கடமைகள் முடிவுறுத்தப்படும் என்று யாழ்ப்பாண காணி மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.

மீண்டும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் வழமை போல் அனைத்துச் சேவைகளும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்திய மீனவர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. அவர்களுக்கு கொரோனா பரிசோதனையை மேற்கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ,25)

## கால்நடைகளைப் பாதுகாக்க இந்தவாரத்துக்குள் நடவடிக்கை

அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 29

கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு இந்த வாரத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கால்நடை இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார். கிளிநொச்சி கோணாவிலில் மேய்ச்சல் இல்லாமையால் மாடுகள் இறந்து வருகின்றன என்று பண்ணையாளர்களில் ஒருவரான தங்கவேலு சுரேந்திரன் கவலை தெரிவித்திருந்தார். அங்குசென்று பார்வையிட்டபோது அங்கஜன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சேலைன்களை கொடுப்பதற்கு அல்லது குறைந்தபட்சம் புல்களையாவது மற்ற மாவட்டங்களிலிருந்து எடுத்துக்கொடுக்க கூடிய வகையில் ஏதாவது ஒரு நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்கின்றேன் எனவும் அங்கஜன் அதன்போது தெரிவித்தார். (து-6)

## மீசாலையில் காயமடைந்தோர் யாழ்.போதனாவுக்கு

சாவகச்சேரி, டிசெ. 29

மீசாலையில்இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த இளைஞனும் முதியவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த பாஸ்கரன் (வயது - 60) நிமலராஜன் தனுசன் (வயது - 21) ஆகியோரே காயமடைந்தனர். (து-9)

# ஆயுள்வேத பாணி தயாரிப்பில் வாசுதேவ



கொழும்பு, டிசெ.29

கொவிட்19 நோய்த் தொற்றைக் குணப்படுத்தக்கூடிய பாணியொன்று தயாரிக்கப்படுகிறது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அண்மையில் நாடாளுமன்றில் கொவிட் தொற்றுக்கு எதிரான ஆயுர்வேத பாணி மருந்து கிடைக்கப்பெற்றது. ஆயினும், அதனை நான் பருகவில்லை. இந்தப் பாணி பல நூறு ஆண்டுகளாக சிங்களவர்கள் பயன்படுத்திய மருந்து வகையே. எனவே இந்தப் பாணியை அருந்துவதற்கு அஞ்சத்தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேன், சாதிக்காய், கொத்தமல்லி மற்றும் இஞ்சி என்பனவே இந்த பாணியில் உள்ளடங்கியுள்ளன. வீட்டில் நானும் இந்தப் பாணியைத் தயாரிக்க உள்ளேன். இதற்காக சாதிக்காயை கொள்வனவு செய்துள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# மாகாணசபை தேர்தல் ஒத்திவைப்புக்கு ஆதரவு வழங்குகின்றது சஜித் அணி



கொழும்பு, டிசெ. 29

**கொரோனா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்ட பின்னரே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தும் போது சிற்சில குறைப்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே, அவற்றை நிவர்த்தி செய்து மாகாணசபை முறைமை பலப்படுத்தப்படவேண்டும்.

மாகாணசபைகள் இல்லாததால் செலவுகள் குறைந்துள்ளன என்று முன்வைக்கப்படும் தர்க்கங்களை ஏற்கமுடியாது. ஏனெனில் மாகாணசபை பொறிமுறை தொடர்ந்தும் இயங்குகின்றது.

மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சிக்குப் பதிலாக ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் ஊடாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

ஆகவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். நடத்தப்படவேண்டிய காலகட்டம் தொடர்பில் கேள்வி எழுகின்றது. தற்போதைய சூழ்நிலை மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான ஒன்றல்ல. கொரோனா பரவலைக்கட்டுப்படுத்துவதற்கே தற்போது முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் சுதந்திரமான தேர்தலக்கான சூழல் உருவாக வேண்டும். அப்போது தேர்தலை நடத்தலாம். மாகாண சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் மாத்திரமே நிறுத்தப்பட்டுள்ளன. மற்றும்படி மாகாணசபைகளில் வழமைபோல் செலவுகள் இடம்பெறுகின்றன, என்றார். (ஓ.44)

# நாட்டை வந்தடைந்தனர் உக்ரைன் சுற்றுலாவிகள்

கொழும்பு, டிசெ.29

கொரோனா வைரஸ் பரவலையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று முதல் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உக்ரைனில் இருந்து 185 பேர் கொண்ட முதல் சுற்றுலாக் குழு நாட்டை வந்தடைந்துள்ளது.

இக் குழுவினர் நேற்று பி.ப 2 மணிக்கு மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். (ந-இ)

# தம்மிக்கவின் மருந்தை குடித்தவருக்கு தொற்று

கொழும்பு, டிசெ. 29

கேகாலை மருத்துவர் தம்மிக்க பண்டாரவால் தயாரிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்ற கொரோனாத் தடுப்பு பானத்தை குடித்த ஒருவர் கொரோனா தொற்றுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என வரக்காப்பொல பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். அவருடன் சேர்த்து 12பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒ.இ



# சம்பந்தனின் கபட நாடகம் தமிழருக்கு புரிவதில்லையாம்

## சாடுகிறார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், டிசெ. 29

சமஷ்டித் தீர்வுக்கான பல சந்தர்ப்பங்களை தவறவிட்ட இரா.சம்பந்தன் தற்போது தேர்தலுக்காக மீண்டும் அதனைத் தூக்க ஆரம்பித்துள்ளார். சம்பந்தனின் கபட நாடகம் தமிழ் மக்களுக்கு எப்போதும் புரிவதில்லை. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி யின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமஷ்டி என்ற பதம் சிங்களத் தலைமைகளுக்கும், சிங்கள மக்களுக்கும் பிடிக்காத ஒரு சொல்லாகிவிட்டது. ஆரம்பத்தில் சமஷ்டி என்ற வார்த் தையை சிங்களத் தலைமைகள் தான் பேச ஆரம்பித்தனர். பின் அவர்களே தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தார்கள். முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வரும் வரை சமஷ்டி நோக்கித்தான் அனைவரும் செயற்பட்டோம். அதன் பின்னர் இன்று வரை நடக்கும் சம்பவங்களை சம்பந்தன் மறந்துவிட்டாரா? 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சமஷ்டி கொள்கையை வலியுறுத்தி அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும், ஒற்றையாட்சியை வலியுறுத்தி மகிந்த ராஜபக்சவும் களத்தில் இறங்கி போட்டியிட்டார்கள். 49 சதவீத வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றார். அந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறி தமிழ் மக்களை வாக்களிக்கவிடாமல் சம்பந்தன் குழுவினர் பரப்புரை செய்து தமிழ் மக்கள் வாக்களிக்காமலே சிங்கள மக்கள் 49 சதவீதம் சமஷ்டிக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் மக்களை அந்த நேரத்தில் வாக்களிக்க அனுமதித்திருந்தால் ரணில் விக்கிரமசிங்க மூன்றில் இரண்டு வீத பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றி பெற்றிருப்பார். அந்த வரலாற்றுத் துரோகத்தை தமிழ் மக்களுக்குச் செய்த சம்பந்தன் இன்று சமஷ்டி பற்றி பேசுகின்றார். தமிழ் மக்களுக்கு அவர் ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், நல்லெண்ணத்துடன் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி உருவாக்கும் அணியினருக்கு ஆதரவு தெரிவித்து, இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்றுள்ளது. (ஒ.இ)

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக 8 வயது சிறுவன் போராட்டம்!

## தடை விதித்தது நீதிமன்றம்

கல்முனை, டிசெ.29

ஜனாஸா எரிப்புக்கு எதிராக எட்டு வயதுச் சிறுவனும், அவரது தந்தையும் கவனயீர்ப்பு நடைபவனிப் போராட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டனர். இந்தப் போராட்டம் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடை செய்யப்பட்டது.



இவர்கள் கல்முனை பிரதேச செயலக முன்றலிலிருந்து தமது நடைபவனியை ஆரம்பித்து, சுமார் 26 கிலோமீற்றர் தூரத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகம் வரை சென்று, அப்பிரதேச செயலாளரிடம் மனுவொன்றைக் கையளிப்பதுடன் இந்த நடைபவனியை நிறைவு செய்வதற்கு திட்டமிட்டிருந்தனர்.

இதன்படி, நேற்றுக் காலை 10 மணியளவில் அவர்கள் கல்முனை பிரதேச செயலக முன்றிலிலிருந்து நடைபவனியை ஆரம்பித்து, கல்முனை நகர மண்டபம் வரை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை சென்று கொண்டிருந்தபோது பொலிஸார் வழி மறித்து, நடைபவனியைக் கைவிடுமாறு வலியுறுத்தினர். இதற்கு அவர்கள் இணங்க வில்லை.

இதன்போது சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் சம்பவ இடத்துக்குச் சென்று ஜனநாயக ரீதியான செயற்பாட்டுக்குத் தடை விதிக்க வேண்டாம் என பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் இந்த நடைபவனியை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்ட நீதிமன்ற கட்டளைப்பத்திரம் கொண்டு வரப்பட்டு நடைபவனி நிறுத்தப்பட்டது.

இவர்கள் கல்முனையை அடுத்துள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகம் வரை வாகனத்தில் சென்று, அங்கு மனுவைக் கையளித்து, தமது போராட்டத்தை நிறைவு செய்தனர். (ந-இ)

# நிபுணர் குழுவின் பரிந்துரைக்கு அனைவரும் கட்டுப்படவேண்டும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 29
கொரோனாவால் உயிரிழப்போரின் உடல்களை தகனம் செய்ய வேண்டும் எனும் நிபுணர்களின் பரிந்துரைக்கு அமைய செயற்பட வேண்டியது அனைத்துப் பிரஜைகளதும் கடமை என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

உயிரிழக்கும் நபர்களின் உடல்கள் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தீர்மானத்துக்கு அனைத்து தரப்பினரும் இணங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

# தொற்றுப் பரவலை 2021இல் கட்டுப்படுத்துவது கடினமாம்

## அமைச்சர் சுதர்சினி தெரிவிப்பு



புதிய வீரியமிக்க கொரோனா வைரஸ் பரவுவதால் அடுத்த ஆண்டில் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவதுகடினமாக இருக்கலாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொரோனா வைரஸ் தடுப்பு முறைகள் தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமித்து, அதன் பரிந்துரையின் அடிப்படையில் கொரோனா ஒழிப்பு திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

2021இல் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம் எனினும் புதிய வகை வைரஸ்கள் பரவிவருவதால் இது கடினமாக உள்ளது.

ஆகக்குறைந்தது நோயாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த பல நாடுகளில் இருந்து மருந்துகளை கொண்டுவர முயல்கின்றோம்.

கொரோனாத் தடுப்பு மருந்துகள் பல உள்ளதால் அவற்றின் திறனை அறிவது கடினம்.எனினும் எதிர்காலத்தில் இந்த மருந்துகளை அதிக ஆபத்தான பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படுத்துவதன் மூலம் உயிரிழப்பைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# காளியம்மன் கோபத்தாலேயே பதவி இழந்தார் மேர்வின்

## கூறுகிறார் பூசகர் சிவபாதசுந்தரம்

கொழும்பு, டிசெ.29
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு காளியம்மன் தண்டனை வழங்கியதாலேயே அவர் அதிகாரம் இன்றி உள்ளார் என சிலாபம் முன்னேஸ்வரம் பத்திர காளியம்மன் ஆலயத்தின் பிரதான பூசகர் காளிமுத்து சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது,

காளியம்மன் பக்தர்களுக்கு வரமளிப்பது உண்மையானது. அந்த வரம் அனைவருக்கும் கிடைக்கும் ஒன்றல்ல. காளியம்மன் மிகவும் சக்திவாய்ந்த தெய்வம்.

அந்த அம்மனை அவமதித்தால், அனைவருக்கும் பாதிப்பு ஏற்படும். அது பயங்கரமான கெடுதியான பலனைக் கொண்டு வந்து சேர்க்கும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# சாரதிக்கு பிணை

சாவகச்சேரி,டிசெ.29
விபத்தை ஏற்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் சாரதியை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

நாவற்குழி சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் சென்றவரை, மோட்டார் சைக்கிள் மோதியது. இதில் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போதே நிதிமன்றம் அவரைப் பிணையில் செல்ல உத்தரவிட்டது. (ஐ-9)

# தங்கத்தின் விலை குறைவடைகிறது

கொழும்பு.டிசெ.29
புறக்கோட்டை சந்தை நிலவரப்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. அத்துடன் 22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 96 ஆயிரத்து 200 ரூபாவாகக் காணப்படுகின்றது. கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதம் ஒரு பவுணின் விலை 3 ஆயிரம் ரூபாவால் குறைவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)




கற்பகா திட்டத்தின் 27 ஆவது கட்டமாக, கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு, பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலைச் சூழலில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (க-222)



# இடைவிடாத கடும் மழையால் தாழ் நிலங்கள் வெள்ளத்தில்!

திருகோணமலை, டிசெ.29
திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் முதல் பெய்து வரும் பலத்த மழை காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

திருகோணமலை நகரை அண்மித்த உப்புவெளி, அலஸ்தோட்டம், வரோதய நகர், மட்கோ, புதுக்குடியிருப்பு பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுத்துள்ளது. தம்பலகாமம், கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, மூதூர் கிழக்கு, வெருகல் ஆகிய பகுதிகளிலுள்ள தாழ் நிலப் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இதனால் வீசப்பட்ட நெல் விதைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அதுமட்டுமன்றி பள்ளிக்குடியிருப்பு - தோப்பூரை இணைக்கும் பிரதான வீதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கட்டைபறிச்சான் இறால் பாலத்தை மேவி வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மழை மேலும் தொடருமானால் இன்னும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை தோன்றியுள்ளது (ற-40)



# கொரோனா இறப்புக்கள் தொடர்பில் பொய்யான செய்திகளை பதிவிடாதீர்

## சுகாதார அமைச்சு பரிந்துரை

கொழும்பு, டிசெ.29
கொரோனா இறப்புக்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்யான பரப்புரைகளை மேற்கொள்வதைத்தவிர்க்குமாறு கோரி அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக சில இணையத்தளங்கள் போலியான பரப்புரைகளை மேற்கொள்கின்றன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம், கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் அனைவரின் சடலங்களும் தகனம் செய்யப்படுகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் இலாபத்து க்காக சுகாதார அமைச்சின் கொள்கைகளை திரிபு படுத்தி போலிச் செய்திகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மஞ்சளும் மாதனமுத்த அரசும்

கொரோனா இலங்கையில் பரவத்தொடங்கியதும் மவுசு கூடிய பொருளாக மாறிப்போனது மஞ்சள். மஞ்சளுக்கு இயற்கையாகவே கிருமிகளைக் கொல்லும் தன்மை அதிகமாகவே இருப்பதால், கொரோனாவையும் அது தடுக்கும் என்று மக்கள் நம்பினர். இன்னமும் மஞ்சள் கொரோனாவைத் தடுக்க வல்லது என்று எந்த ஆய்வும் சொல்லவில்லை. ஆனாலும் மக்கள் மனதில் மஞ்சளைப் பயன்படுத்தி, தொற்று நீக்கம் செய்தாலோ அல்லது அதனை உணவோடு சேர்த்து உட்கொண்டாலோ கொரோனா அணுகாது என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துவிட்டது. அதனால் கொரோனா இலங்கையில் குடிபுகுந்த பின்னர் எல்லோரும் மஞ்சளைத் தேடத் தொடங்கினர்.

தன்னுடைய நாட்டில், ஒரு பொருளுக்கு கேள்வி அதிகரித்தால் அந்நாட்டு அரசாங்கம் என்ன செய்யும்? அந்தப் பொருளுக்கு பற்றாக்குறை ஏற்படாவண்ணம் இறக்குமதி செய்ய நினைக்கும். ஆனால் கோத்தாபய அரசு இதற்கு நேரெதிராக யோசித்தது.

"இறக்குமதி செய்தால் அதனை உற்பத்தி செய்த நாட்டுக்குத்தான் இலாபம், இலங்கைக்கு வெறும் வரியால் மட்டுமே வருமானம். அதனால் மஞ்சளை இனிமேல் இங்கேயே உற்பத்தி செய்வோம். இறக்குமதியைத் தடை செய்வோம்" என்று அரசு அறிவிக்க, மஞ்சள் இலங்கையில் அரியவஸ்துவாக மாறிப்போனது. ஏப்ரல், மே மாதங்களில் பயிரிட்டிருந்தாலும் கூட, இப்போது இலங்கை மஞ்சள் சந்தைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால்,இப்போது ஒரு கிலோ மஞ்சள் 7 ஆயிரம் ரூபாவைத் தாண்டிவிட்ட போதும், இன்னமும் இலங்கையில் விளைவிப்பதாகச் சொல்லப்படும் மஞ்சள் விற்பனைக்கு வந்துவிட்டது என்ற எந்தவொரு தகவலும் இல்லை.

இந்த நிலையில், இலங்கையில் மஞ்சளுக்கு இருக்கும் கிராக்கியைப் பயன்படுத்துவதைக் கண்ட கடத்தல்காரர்கள், கஞ்சா கடத்துவதை விடவும் மஞ்சளைக் கடத்தினால் அதிக லாபம் கிடைக்கும் என்று நினைத்து தொழிலை மாற்றினார்கள். முன்னர் எங்கெல்லாம் கஞ்சா பிடிக்கப்பட்டதோ அங்கெல்லாம் இப்போது மஞ்சள் மூடைக் கணக்கில் பிடிபடுகின்றது. இப்படிப் பிடிபடும் மஞ்சளை சந்தைக்கு அனுப்பினால் கூட, ஓரளவுக்கு மஞ்சளுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால் இலங்கை அரசாங்கமோ, கடத்தல் பொருளைத் தொட்டால் கூட பாவம் என்று நினைக்கிறது போலும். அதனால்தான், இந்தியாவில் இருந்து மன்னாருக்கு கடத்திவரப்பட்ட 532 கிலோ மஞ்சள் தீயிட்டு எரிக்கப்பட்டிருக்கிறது. மஞ்சள் ஒன்றும் கஞ்சா, ஹெரோய்ன் போல கெடுதி தரும் பொருளென்றால், அதைத் தீயிட்டு எரிப்பதில் நியாயமிருக்கிறது. ஆனால் ஒரு மருத்துவ, சமையல் பொருளான மஞ்சளை, மிகப் பெரியளவில் தட்டுப்பாடு நிலவும் சூழலில் ஏன் தீயிட்டு அழிக்க வேண்டும்?

ஒருவேளை இந்தியாவில் இருந்து மஞ்சளோடு மஞ்சளாகக் கொரோனாவும் வந்துவிடும் என்பதாலேயே அப்படி அழித்ததாக அரசு சொல்லிக் கொள்ளக்கூடும். ஆனால் சீனாவில் இருந்து கப்பல் கப்பலாக வரும் பொருள்களூடாகவும், தொழிலாளர்களூடாகவும் வராத கொரோனாவா இந்திய மஞ்சளால் வரப்போகின்றது? கொரோனாவின் தகவமைக்கட்ட இரண்டாம் தலைமுறை வைரஸ் மேற்கு நாடுகளில் வீரியம் பெற்றுள்ள நிலையில், நேற்றுக்கூட மத்தள விமான நிலையத்தினூடாக உக்ரேன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குள் நுழைந்திருக்கிறார்கள். உலக்கை போகும் இடத்தை திறந்து வைத்துக் கொண்டு ஊசி போகும் இடத்தை மூடிவைப்பது போல, கொரோனா வரும் வாசல்களை திறந்துவிட்டுள்ள அரசு, மஞ்சளுக்கு மட்டும் கருணை காட்டாமல் தீயிட்டு எரிக்கின்றது. மக்கள் நலன் மீது அக்கறையும், கொஞ்சம் பொருளாதாரத் தொலைநோக்கும் கொண்ட எந்தவொரு அரசும் செய்யாத காரியங்களையெல்லாம், கோத்தா தலைமையிலான இந்த 'மாதனமுத்த' அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதற்கு மஞ்சள் விவகாரமும் நல்லதொரு சாட்சியே.

# மில்லியன் ரூபா கணக்கில் அரசுக்கு வருவாய் இழப்பு!

கொழும்பு, டிசெ. 29

**அரசுக்குச் சொந்தமான 31 நிறுவனங்கள் இந்த ஆண்டில் மில்லியன் கணக்கில் இழப்பைச் சந்தித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் 31 நிறுவனங்கள் இந்த ஆண்டின் முதல் எட்டு மாத கால நிலவரத்தின்படி மில்லியன் கணக்கில் இழப்பைச் சந்தித்துள்ளன. 10 ஆயிரத்து 447 மில்லியன் ரூபா இந்த வருடத்தில் வருவாய் இழப்பாக அமைந்துள்ளது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறிலங்கா எயார்லைன்ஸ், இலங்கை போக்குவரத்து சபை, லங்கா சதொச, அரச பொறியியல் கூட்டுததாபனம், எச்.டி.எப்.சி வங்கி மற்றும் அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சிகளான ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என் ஆகியவை பெரும் இழப்பை சந்தித்த நிறுவனங்களின் பட்டியலில் அடங்குகின்றன.

அதேபோன்று ஊழியர்கள் நம்பிக்கை நிதியம், இலங்கை வங்கி, இலங்கை துறைமுக அதிகார சபை, லொத்தர் சபை, தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியம், அரச மருந்தாக்கல் கூட்டத்தாபனம் மற்றும் சீனித் தொழிற்சாலை ஆகிய அரசுக்கு சொந்தமான நிறுவனங்களும் இழப்பைச் சந்தித்துள்ளன - என்றுள்ளது.

(ம-இ)



## இறக்கும் மாடுகளுக்கு உயிர் கொடுக்க முயற்சி

கிளிநொச்சி,டிசெ.29

கிளிநொச்சி மாவட்டத்தில் போதிய உணவின்றி, உயிருக்கு போராடும் மாடுகளுக்கு, கால்நடை வைத்திய அதிகாரிகள் நேரில் சென்று சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இல்லாமையால் கால்நடைகள் போதிய உணவைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனால் கால்நடைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கோணாவில் பகுதியில் பெருமளவு கால்நடைகளை வளர்க்கும் பண்ணையாளர், அவற்றைப் பாதுகாக்க பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இதே அவலத்தை ஏனையோரும் எதிர்கொண்டுள்ளனர். கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்குவதற்கான பெரும் தொகை நிதியைச் செலவு செய்ய வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (க-6,113)

## 'நத்தார்' பொதுமன்னிப்பு விரைவில் வழங்கப்படும்

கொழும்பு, டிசெ. 29

நத்தாரை முன்னிட்டு கைதிகளுக்கு வழங்கும் பொதுமன்னிப்பு இந்த வருடம் இன்னும் வழங்கப்படாத நிலையில், அது விரைவில் வழங்கப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

ஒவ்வொரு நத்தார் தினத்தன்றும் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவர். ஆனால், இம்முறை நத்தார் தினத்தன்று எந்தவொரு கைதியும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவில்லை. இந்த நிலையில், வாழ்நாள் வரையிலும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் விவரம் திரட்டப்படுகின்றன, கடந்த நான்கு வருடங்களுக்கான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்படுவதால், நத்தார் பொதுமன்னிப்பு காலந்தாழ்த்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திரட்டப்பட்ட தகவல்கள் நீதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. அமைச்சின் பரிந்துரைகள் கிடைத்ததன் பின்னர் நத்தார் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## சாரதி அனுமதிப்பத்திரத்தை இராணுவத்தினர் அச்சிடுவர்

கொழும்பு,டிசெ.29

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் என்று போக்குவரத்து ஆணையாளர் சுமித் அலஹகோன் தெரிவித்துள்ளார்.

11 ஆண்டுகளாக தென்னாபிரிக்க நிறுவனம் ஒன்றால் சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டு வந்துள்ளன.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அதனை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு இதுவரை சென்று கொண்டிருந்த பெருமளவான நிதி மீதப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 3 மாவட்டங்களில் தொற்று அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.29



கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மூன்று மாவட்டங்களில், கொவிட் - 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தின் அவிசாவளை பிரதேசத்தில் தொடர்ந்தும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (க-இ)

## நகர சபை உறுப்பினருக்கு தொற்றில்லை

ஹற்றன்,டிசெ.29
டிக்கோயா நகரசபையின் தலைவர், உபதலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில், அவர்களுக்குத் தொற்று இல்லை என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.
டிக்கோயா நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இராமையா பாலகிருஷ்ணன் இதனைத் தெரிவித்தார்.
நகரசபையின் உறுப்பினர் ஒருவருக்கு, கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அவருடன் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட நகரசபையின் ஏனைய உறுப்பினர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்.
இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையின் முடிவுகளில் தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளது. (க)

## புதுவருடக் கொண்டாட்டத்தை குடும்பத்துடன் மட்டுப்படுத்துக

### பொலிஸார் ஆலோசனை



கொழும்பு,டிசெ.29
புதுவருடக் கொண்டாட்டங்களை தங்களது குடும்ப உறுப்பினர்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்வது அவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் பாதுகாப்பானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
மேல் மாகாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் மக்களுக்கு மேற்கொள்ளப்படும் ரெபிட் அன்டிஜென் பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.
11 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இந்தப் பரிசோதனையில் 54 பேர் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## சிறைச்சாலைகளில் 3,709 பேருக்கு தொற்று

கொழும்பு,டிசெ.29
நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை 3 ஆயிரத்து 709 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
தொற்று உறுதியானவர்களில் 3 ஆயிரத்து 229 பேர் குணமடைந்துள்ளனர். அவர்களில் 112 பேர் சிறைச்சாலை அதிகாரிகள்.
வெலிக்கடை சிறைச்சாலையில் 832 பேருக்கும், மஹசின் சிறைச்சாலையில் 829 பேருக்கும், மஹர சிறைச்சாலையில் 785 பேருக்கும், கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலையில் 410 பேருக்கும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் 271 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அத்துடன் சிறைச்சாலையில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியாகிய 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-இ)

## 72 வருடங்களாக மக்களை ஏமாற்றுகிறது கூட்டமைப்பு!!

### வியாழேந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29
நாங்கள் இந்த அரசாங்கத்தை நம்பினோம் ஆனால் அரசு எங்களை ஏமாற்றிவிட்டது என்று தெரிவித்து தமிழ் மக்களை கூட்டமைப்பினர் ஏமாற்றுகின்றனர். 72 வருடங்களாக இந்த ஏமாற்றுகை இடம்பெற்று வருகின்றது இவ்வாறு தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்.
மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உண்மையாகவே அரசாங்கம் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றவில்லை. தமிழ்த் தலைவர்களும் அரசாங்கத்தை ஏமாற்றவில்லை. இரண்டு தரப்புக்களும் சேர்ந்து அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். இன்னும் ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இது தெரியாமல் இன்னும் சிலர் அவர்களுக்குப் பின்னால் போய்க்கொண்டுதான் இருக்கின்றார்கள்.
எமது மக்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கான தீர்வை இந்த அரசாங்கத்தின் ஊடாக நாங்கள் பெற்றுக்கொடுப்போம். அதனையே மக்கள் விரும்புகின்றார்கள். கடந்த காலங்களில் எம்மால் எதையும் செய்ய முடியாத நிலையிருந்தது. ஆனால் தற்போது அப்படியல்ல. எம்மால் பல்வேறு வேலைத்திட்டங்களை உங்களுக்காக செயற்படுத்தக்கூடிய சூழ்நிலையுள்ளது என்றார். (ம-இ)

## கரைச்சி சமுர்த்தி வங்கி சேவைகள் ஆரம்பம்

கிளிநொச்சி,டிசெ.29
கரைச்சி சமுர்த்தி வங்கியின் சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.
கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இணையவழி வங்கி நடைமுறை சேவையை ஆரம்பித்தார்.
வாடிக்கையாளர்களுக்கு வங்கிக் கணக்குப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.
நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரி.ஆரணி மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (க-6)



## கணினி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கி திறப்பு

வவுனியா,டிசெ.29
வவுனியாவில் கணினி மயப்படுத்தப்பட்ட நான்காவது சமுர்த்தி வங்கி நேற்றுத் திறக்கப்பட்டது.
வவுனியா மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி ச.பத்மரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், சமுர்த்தி தலைமையக அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வங்கியின் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.
வவுனியா மாவட்டத்தில் அண்மையில் செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி, ஓமந்தை சமுர்த்தி வங்கிகள் கணினி மயப்பட்டுத்தப்பட்டன. தற்போது பாவக்குளம் வங்கியும் கணினி மயப்பட்டுத்தப்பட்டுள்ளது. (க-110)



## சாவ.மருத்துவமனையில் மேலும் ஒரு முகப்பு.கொட்டகை

சாவகச்சேரி,டிசெ.29
சாவகச்சேரி மருத்துவமனைக்கு மேலும் ஒரு முகப்புக் கொட்டகை அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
கொரோனா காலத்தில் மருத்துவமனைக்கு வரும் வெளி நோயாளர்களை சமூக இடைவெளி பேணும் வகையில் வைத்திருக்க இடம் இல்லாத நிலையில், முகப்புக் கொட்டகை அமைத்து வழங்குமாறு மருத்துவமனை அத்தியட்சகரால் கோரப்பட்டிருந்தது.
இதனையடுத்து பெயர் குறிப்பிட விரும்பாத நலன் விரும்பியொருவர் முகப்புக் கொட்டகை அமைத்து வழங்கியுள்ளார்.
இந்நிலையில் ஏற்கனவே சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் ஒருவரால் ஒருபக்கம் முகப்புக்கொட்டகை அமைத்து வழங்கப்பட்ட நிலையில் தற்போது இரண்டாவது கொட்டகை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## சு.கவுடனான ஒப்பந்தங்களுக்கு முரணாக நடக்கிறது பெரமுன!

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சியுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களுக்கு முரணான வகையில் பெரமுன செயற்படுகின்றது என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் பேராசிரியருமான ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விவாதிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை தோல்வியடைந்துள்ளன. அதேநேரம், அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து பெரமுனவுடன் எந்தவொரு கலந்துரையாடலும் இதுவரை நடத்தப்படவில்லை - என்றார். (ம-இ)

## கொரோனாத் தொற்று; மூடப்பட்டது வங்கி!

கொழும்பு, டிசெ. 29
ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து கொழும்பு - வெள்ளவத்தையில் இயங்கும் தனியார் வங்கியொன்று நேற்றுமுன்தினம் மூடப்பட்டுள்ளது.
வங்கியில் உள்ள ஏனைய ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-இ)

## கொரோனாத் தொற்று எதிரொலியால் மூடப்பட்டது முதல்வர் அலுவலகம்!

கொழும்பு, டிசெ. 29
கொரோனாத் தொற்று உறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து வடமத்திய மாகாண முதல்வரின் அலுவலகம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
இந்த நிலையில் தொற்று உறுதியானவருடன் தொடர்புடைய அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் அலுவலகம் அறிவித்துள்ளது. மேலும் அலுவலக வளாகத்தில் கிருமி நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அடுத்த இரண்டு அல்லது மூன்று நாள்களில் மீண்டும் அன்றாட நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-இ)



## ஜனாஸாக்களை எரிக்குக வலியுறுத்திப் போராட்டம்!

கொழும்பு, டிசெ. 29

கொரோனாத் வைரஸால் இலங்கையில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்துவிடும் படி வலியுறுத்தி கொழும்பில் பௌத்த பிக்குகளால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பௌத்த தேரர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் நிறைவில் தங்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் தேரர்கள் கையளித்தனர். (ம-இ)

கொரோனாப் பெருந்தொற்று

# ஜனாஸாக்கள் விடயத்தில் அரசு மனிதாபிமானம் இல்லாத நிலை!

அசாத் சாலி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 29

**கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் விடயத்தில் அரசு மனிதாபிமானம் இல்லாமல் செயற்படுகின்றது என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.**

தேசிய ஐக்கிய முன்னணியால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றாளர்களைக் கையாளுவதிலும் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக செல்பவர்களை அனுசரிப்பதிலும் அரசாங்கமும் அரச அதிகாரிகளும் செயற்படும் விதம் மிகவும் கவலையளிக்கின்றது. மனிதாபிமானமே இல்லாத நிலைக்கு நாடு சென்றுகொண்டிருக்கின்றது.

முஸ்லிம் ஒருவர் மரணித்தால் அது கொரோனாவாக மாறும் நிலையே நாட்டில் இடம்பெற்று வருகின்றது. அதனால்தான் நாட்டில் இதுவரை கொரோனாவால் மரணித்தவர்களில் 120க்கும் அதிக மானவர்கள் முஸ்லிம்கள். மேலும் நாட்டில் வைரஸியல் நிபுணர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் யாரும் இல்லை. இந்தக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரமே அரசாங்கம் கொரோனாவால் மரணிப்பவர்களை எரிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

ஜனாஸா எரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சர்வதேச ரீதியில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் நாட்டின் நற்பெயருக்கே களங்கம் ஏற்படப்போகின்றது. அத்துடன் இவ்வாறான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் காரணமாக முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதும் குறைவடைந்துவிடும் என்றார். (ம-இ)



ஜனாஸாக்கள் விவகாரம்

## அடக்கம்செய்வதற்கு அனுமதிக்குமாறு கொழும்பு முகத்திடலில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, டிசெ. 29

கொரோனாத் தொற்றால் மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதை நிறுத்தி, இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி, புத்தளம் கொழும்பு முகத்திடலில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம் ஐக்கிய மக்கள் அமைப்பால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. சர்வமத ஒன்றியத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், அரசியல் தலைமைகள் உள்ளிட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-இ)

## இஸ்லாமியத் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுங்கள்

ஐ.தே.க அழுத்தம்

கொழும்பு, டிசெ. 29

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லீம்களின் ஜனாஸாக்கள் விடயத்தில் இஸ்லாமியத் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்த அரசு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்வதா? எரிப்பதா? என்பதை அந்தந்த இன மக்களே தீர்மானிப்பர். எனினும் கொரோனாப் பெருந்தொற்றுத் தொடர்பான நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அது குறித்து தீர்மானம் எடுக்கையில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு - என்றார். (ம-இ)

## மஞ்சளுடன் நால்வர் கைது

காலி, டிசெ. 29

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை மஞ்சளுடன் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த நபர்களிடமிருந்து 20 ஆயிரம் கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

ஹுங்கம கலமண்டிய மீன் பிடித்துறைமுகத்துக்கு அருகில் உள்ள இடத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிரடிப்படையினரால் தெரிவிக்கப்படுகின்றது. (ரி5)

## போதைப் பாவனையாளர்களுக்கு சாரதிப் பத்திரத்தில் கிடுக்குப்பிடி

கொழும்பு, டிசெ. 29

ஒருவருட காலத்துக்குள் மதுபான பாவனையில் ஈடுபட்டிருந்ததாகக் கண்டறியப்பட்டால் அவ்வாறான நபர்களுக்கு கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:கனரக வாகன சாரதி அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள நபர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடம்பெறும். தனியார் பஸ்கள் மற்றும் கனரக வாகன சாரதிகள் மதுபோதையில் வாகனம் செலுத்துகின்றனர் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றின் அடிப்படையில் புதிய நடைமுறையைப் பின்பற்ற எதிர்பார்த்துள்ளோம். இதன்படி ஒரு வருட காலத்துக்குள் மதுபான பாவனையில் ஈடுபட்டிருந்ததாக சிறப்பு உயிரியல் சோதனை மூலம் கண்டறியப்பட்டால் அவ்வாறான நபர்களுக்கு கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது - என்றார். (ம-இ)

ஜனாஸா எரிப்பு விவகாரம்

# நிலத்தடி நீர் மாசுபடுமென்பதை முடிந்தால் நிரூபித்துக் காட்டுக!

கோத்தாபயவுக்கு அலிசாஹிர் சவால்

கொழும்பு, டிசெ. 29

கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழக்கும் முஸ்லீம்களின் ஜனாஸ்க்களை அடக்கம் செய்வதன் மூலம் நிலத்தடி நீர் மாசுபடும் என்பதை நீங்கள் நிரூபித்தால், ஜனாஸா எரிப்புக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் கைவிடுகின்றோம் என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உடல்களை அடக்கம் செய்வதன் மூலமாக நிலத்தடி நீர் மாசுபடும் என்று நீங்கள் முன்வைத்துள்ள 'நிபுணர்' குழு உறுதியாக நம்பினால், அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகள் தொடர்பான நிரூபணங்களை நுண்ணியல் மற்றும் தொற்று நோயியல் துறையில் உள்ள பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பேராசிரியர் மலிக் பீரிஸ், டாக்டர் நிஹால் அபேசிங்க, டாக்டர் பாபா பாலிஹவதான உள்ளிட்ட நிபுணர்களிடம் முன்வைக்க வேண்டும். நான் குறிப்பிட்டுள்ள நிபுணர்களும் உங்கள் அரசு கூறுவது சரியென்றால் ஜனாஸா எரிப்புக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் கைவிடுகின்றேன் - என்றார். (ம-இ)



## பி.சி.ஆர் பரிசோதனை செய்வதற்குத் தயார்!

பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொள்ளுமாறு சுகாதாரப் பிரிவால் தன்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டால், நிச்சயம் அந்தப் பரிசோதனைக்கு உட்படுவேன் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சபாநாயகரின் பாதுகாப்பு பிரிவின் பொலிஸார் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில், சபாநாயகருக்கு பாதுகாப்பு வழங்கும் அதிகாரிகள் அனைவருக்கும் பி.சி.ஆர் செய்யப்பட்டு, அவர்களுக்குக் கொரோனா தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-இ)

# புதிய அரசமைப்பு வரும்வரை மாகாணத் தேர்தல்கள் வேண்டாம்

## பௌத்த சாசனப் பணிக்குழு போர்க்கொடி

**கொழும்பு, டிசெ. 29**

**புதிய அரசமைப்புத் தொடர்பான அறிக்கையை நிபுணர் குழு சமர்ப்பிக்கும்வரை மாகாண சபைக்கான தேர்தல்களை நடத்துவதற்கான முடிவை தாமதப்படுத்துமாறு அனைத்து இலங்கை பௌத்த காங்கிரஸின் பௌத்த சாசனப் பணிக்குழு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் பௌத்த சாசன பணிக்குழு விடுத்துள்ள அறிக்கையில், புதிய அரசமைப்புக்கான எங்கள் திட்டங்களை சமர்ப்பித்துள்ளோம். அத்துடன் மாகாண நிர்வாக முறை நாட்டுக்குத் தேவையில்லை. இலங்கையின் நிர்வாகத்துக்கு மத்திய அரசும் உள்ளூராட்சி மன்ற முறையும் போதுமானது - என்றுள்ளது.

இதேவேளை, புதிய அரசமைப்பு வரும்வரை மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது என பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-இ)



## தார் வீதியில் விரிசல்

கொடிகாமம், டிசெ.29

மீசாலை கமநல சேவை நிலையத்துக்கு முன் பாகவுள்ள தாக் கலவை வீதியில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் நீர் வழங்கல் அதிகார சபையால், ஏ9 வீதி அருகில் குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட கிடங்கு காரணமாகவே இந்த விரிசல் ஏற்பட்டுள்ளது

இதனால் இரவு வேளைகளில் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளன.

உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு வீதியைச் சீரமைக்குமாறு வாகன சாரதிகளும், பொதுமக்களும் கேட்டுள்ளனர். (க-159.9)

## தண்டப்பணத்தில் 10 வீதம் நீதி அமைச்சுக்கு

*வலி. தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்*

வலி.தென்மேற்கு, டிசெ.29

நீதிமன்றம் மூலம் குற்றவாளிகளிடமிருந்து அறவிடப்படும் தண்டப்பணத்தில் 10 வீதத்தை நீதி அமைச்சுக்கு வழங்க வலி. தென்மேற்கு பிரதேச சபை முன்வந்துள்ளது.

தேசிய ரீதியாக நீதிமன்றங்கள் மூலம் குற்றவாளிகளிமிருந்து அறவிடப்படும் தண்டப்பணம் அந்தந்தப் பகுதியில் உள்ள பிரதேச சபைகளுக்கு நீதி அமைச்சால் வழங்கப்படுவது வழக்கம். இந்த நடைமுறையால் பிரதேச சபைகளுக்கு வருடாவருடம் பல இலட்சம் ரூபா வருமானமாக கிடைக்கின்றது.

இந்த நிலையில் நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கும் பணத்தில் 25 வீதத்தை நீதிமன்றங்களின் அபிவிருத்திக்கு வழங்குமாறு நீதி அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்தே சபையால் இந்த முடிவு எடுக்கப்பட்டு அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ-115)

## முஸ்லிம் கட்சிகள் நமக்குத் தேவையா?

*மீள்பரிசீலனை செய்யக் கோருகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்*

கொழும்பு, டிசெ. 29



முஸ்லிம் கட்சிகள் எமக்குத் தேவையா என்பதை சமூகம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அஷ்ரப்பின் மறைவைத் தொடர்ந்து கட்சியின் அடிப்படை என்று கூறப்பட்ட குர்ஆன், ஹதீஸ் வழிகாட்டல்கள் ஓரங்கட்டப்பட்டன. இதுவே சமூகத்துக்கு கிடைத்த முதலாவது சாபமாகும். முதன் முதலாக கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி ஏற்பட்டது. இதற்குத் தீர்வாக பேரியல் அஷ்ரபும், ரவூப் ஹக்கீமும் இணைத் தலைவர்களானார்கள்.

இருப்பினும் தலைமைத்துவ ஆசை இன்னும் சிலரையும் தொற்றியது. அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் மீது குறை கண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவராக விலகி தனிக் கட்சி ஆரம்பித்தார்கள். புதிய கட்சி ஆரம்பித்தமைக்கு இவர்கள் அனைவரும் கூறிய காரணம் முஸ்லிம்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவோம் என்பதுதான். முஸ்லிம் மக்களும் நம்பி வாக்களித்துக் கொண்டிருந்தார்கள். கிடைத்த சில ஆசனங்களை வைத்துக் கொண்டு எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அந்தக் கட்சியோடு சேர்ந்து அமைச்சு, இராஜாங்க அமைச்சு, பிரதி அமைச்சு, இணைத்தலைமை என பல வரப்பிரசாதங்களைப் பெற்று அனுபவித்து வந்தனர். ஆனால் அவர்கள்தாம் சார்ந்த மக்களுக்கு என்ன செய்தனர். இந்தக் கட்சிகள் தேவைதானா என்று நாம் சிந்திக்க வேண்டும் என்றுள்ளது. (ம-இ)

## யானை உயிரிழப்பு: கைதானவருக்கு பிணை

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி கல்மடு பிரதேசத்தில் யானையொன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில், கைதான நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்ட நபர், கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். இதன்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கல்மடு பகுதிக்கு வந்த காட்டு யானை, வயலை சேதப்படுத்தி பயிர்களை உணவாக்கி அழித்துள்ளதுடன், அந்தப் பகுதியிலே உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் கிராம சேவையாளர் ஊடாக வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

யானை சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கி உயிரிழந்தது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து கல்மடு பகுதியைச் சேர்ந்த நபரொருவரை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் கைதுசெய்தனர்.

அவர் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். வழக்கு விசாரணையில், சந்தேக நபரை 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (க-6)



மேம்பாலம் இன்மையால்

## மழை காலங்களில் போக்குவரத்து பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ.29

முல்லைத்தீவு துணுக்காய் கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் மேம்பாலம் அமைக்கப்படாமையால், மழைகாலங்களில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

கோட்டைக்கட்டியகுளம் நிரம்பி வான்பாய்கின்றபோது துணுக்காய் அக்கராயன் வீதியில் உள்ள கோட்டை கட்டியகுளம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள தாழ் பாலம் வழியாக வீதியைக் குறுக்கறுத்து ஐந்தடி உயரத்துக்கு வெள்ளம் பாயும்.

இதன் காரணமாக மூன்று நாள்களுக்கு மேல் போக்கு வரத்துகள் பாதிக்கப்படும். இது தொடர்பாக கடந்த 5 ஆண்டுகளாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி2)



தருமபுரம் 5 ஆம் வீதியின் குறுக்கே மின்கம்பம் ஒன்று கடந்த ஒரு வாரமாக வீழ்ந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

அந்த வீதியில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால் மிகுந்த அச்சத்துடன் பயணிக்கின்றோம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-113)

## வயல் வெளியில் ஆணின் சடலம்

திருமலை, டிசெ.29

சம்பூர் வயல் வெளியிலிருந்து, ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 65 வயதான ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னரே மரணத்துக்கான காரணத்தை தெரிவிக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் பகுதியில் நேற்று இடிமின்னல் தாக்கம் நீடித்தது. அதனால் அவர் மின்னல் தாக்கி உயிரிழந்திருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க ஐ.நாவுடன் கைகோர்க்கும் இலங்கை

இலங்கைக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத் துக்கு கிடைக்கும் இரகசிய தக வல்களைப் பயன்படுத்த இலங்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம், இலங்கை கடற்படை மற்றும் அரச உளவுச் சேவை இணைந்து போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை களை முன்னெடுக்கவுள்ளன.

அதற்கமைவாக சர்வதேச போதைப்பொருள் கடத்தல் வலை யமைப்பின் நடவடிக்கைகள், இலங்கைக்கு அவர்கள் போதைப் பொருள் கடத்தும் பாதைகள் உள் ளிட்டவை தொடர்பில் செய்மதித் தகவல்கள் மற்றும் ஏனைய உள வுச் சேவைகளின் தகவல்களை ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஊடாக பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஒரு வாரத்துக்குள் அதற் கான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அர சின் உயர் மட்ட தகவல்கள் தெரி வித்தன. (க-இ)

## கொரோனா பெருந்தொற்று: 78 பேர் வீடுகளில் இறப்பு

கொழும்பு, டிசெ. 29

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடந்த ஆறு மாதங்களில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள வீடுகளில் தங்கியிருந்த நிலையில் 78 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கொழும்பு பிரதான சட்ட மருத்துவ அதிகாரி அஜித் தென்னகோன் தெரிவித்தார். இக் காலப் பகுதியில் வீடுகளில் உயிரிழந்த 383 பேரின் உடல்கள் கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சடலங்களில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே 78 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்தமை கண் டறியப்பட்டது. (ம-இ)

# சர்வதேச விசாரணையாலேயே நீதி கிட்டுவது சாத்தியமாகும்!

### சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 29

**சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும்போதே எமக்கு நீதி கிடைப்பது சாத்தியமாகும் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

வடக்கு கிழக்கில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங் கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடய த்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:

நாட்டில் பௌத்த சிங்கள பேரின வாத அரசாங்கம் தலைதூக்கியுள்ள நிலையில், எமக்குரிய நீதி கிடைப்ப தென்பது சந்தேகமே. ஆகையால் எமது போராட்டங்களை சர்வதேச பார்வைக்குக் கொண்டுவருவது எமது தலையாய கடமையாகும். எமது பிரச்சினைகள் ஐக்கிய நாடு கள் சபையின் தலையீட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் முன்னிற்க வேண் டும். சர்வதேச சுயாதீன விசா ரணை மேற்கொள்ளப்படும்போதே எமக்கு நீதி கிடைப்பது சாத்தியமா கும் - என்றுள்ளது. (ம-இ)

## நுவரெலியா விவசாயிகளுக்கு மிகவிரைவில் தீர்வு தரப்படும்

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு




நுவரெலியா, டிசெ. 29

நுவரெலியா மாவட்டத்தி லுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு வர்த்தக அமைச்சு மற் றும் விவசாய அபிவி ருத்தி அமைச்சு என் பவை விரைவில் நடவ டிக்கை எடுக்கும் என அமைச்சர் பந்துல குண வர்த் தன தெரிவித்துள் ளார்.

அமைச்சர் பந்துல குண வர்தன மற்றும் நுவரெ லியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன் னணியின் தலைவரு மான வேலுசாமி இராதா கிருஸ்ணன் ஆகியோ ருக்கு இடையிலான பேச்சு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலை அடுத்து கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தி லும் ஊவா மாகாணத் திலும், தற்போது உரு ளைக்கிழங்கு அறு வடை நடைபெறுகின் றது. இந்தச் சந்தர்ப்பத் தில் அரசாங்கம் உரு ளைக்கிழங்கு இறக்கும தியை நிறுத்த வேண்டும் அல்லது இறக்குமதிக் கான வரியை அதிக ரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசி டம் முன்வைத்துள் ளோம் என இராதா கிருஷ்ணன் தெரிவித் தார். (ம-இ)

## மிகப்பெரும் பிரச்சினையாக வேலையின்மை இருக்கிறது

### விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 29

கொரோனாப் பெருந் தொற்று உலக அளவில் பெரும் வேலையின் மையை உருவாக்கியுள் ளது. இலங்கையிலும் இந்தப் பாதிப்பு மிகை யாக ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

'இலங்கையில், இலவசக் கல்வி மற்றும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி எனும் விதிமுறை நடைமுறையில் உள்ளமையால், தெற்காசியப் பிராந் தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை மிக உயர்ந்த கல்வியறிவு வீதத்தைக் கொண்டுள்ளது. இலங்கையில், வயது வந்தோரின் கல்வியறிவு 2017ஆம் ஆண்டு 93.2 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இவ்வளவு உயர்ந்த கல்வியறிவு சதவீதத்துடன், இளைஞர்களுக்கு இடையே அதிக வேலையின்மை காணப்படுவது மிகப்பெரும் பிரச்சி னையாகும். இலங்கையில் வேலையின்மைக்கு, நம்பத்தகாத எதிர்பார்ப்புகளும், அரசாங்க வேலை வாய்ப்புகளுக்கு வரிசையில் இருப்பதும், கடுமை யான வேலைப் பாதுகாப்பு விதிமுறைகள் இருப்ப துமே காரணமாகும் - என்றுள்ளது. (ம-இ)

## அபாய வெளியேற்ற வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

வடமராட்சி,டிசெ.29

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணிக்கு கிழக்குப் பக் கமாக உள்ள கிராம மக்களின் பிரதான வீதியாக காணப்படும் கொடுக்குளாய் அபாயவெளியேற்ற வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப் பட் டுள்ளது.

வடமராட்சி கிழக்கின் கரையோர கிராமங்களில் ஏற் படும் கடல் அனர்த்தங்களில் இருந்து உடன் மக் களை வெளியேற்ற இப் பாதையைப் பயன்படுத்தும் முகமாக பரீட்சார்த்த நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டு வந்தன. ஆனால் அந்த அபாய வெளியேற் றப் பாதை தற்போது மிக மோசமாக அழிவடைந்து காணப்படுகிறது.

குறித்த பிரதேச மக்களின் நிதிப்பங்களிப்புடன் சில வருடங்களுக்கு முன்பே இந்த வீதி சீரமைக்கப்பட்டது. இருப்பினும் முழுமையான பராமரிப்பு இல்லாமை யால் பாதைக்குப் போடப்பட்ட களிமண் ஆற்று நீரால் அரிக்கப்பட்டு தற்போது வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. எனவே இந்த வீதியின் தேவையை கருத்திற்கொண்டு விரைவில் சீரமைக்க உரிய அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-70)





# இராமநாதபுரத்தில் கணினி நிலையம்

கிளிநொச்சி,டிசெ.29

ஸ்ரீ சபாரத்தினம் அறக்கட்டளையின் கல்விப்பிரிவி னரால், இரண்டாவது கணினி நிலையம் கிளிநொச்சி இராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அறக்கட்டளையின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பா ளர் மனோவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட கல்வி வளர்ச்சி அறக்கட்டளை யின் உப தலைவர் பங்கையச்செல்வன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் அறக்கட்டளையின் பாரதிபுர கணினி மற் றும் தையல் நிலையத்தின் நிர்வாகி தாஸ் மதிப்பளிக் கப்பட்டார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதி திறமைச் சித்தி பெற்ற மாணவர் ஒருவருக்கு வாழ் வாதாரக் கொடுப்பனவும் வழங்கப்பட்டது. (க-222)

அவசியதேவை இன்றி

# மருத்துவமனைக்குள் வருவதை தவிர்க்கவும்

## வவுனியா பொது மருத்துவமனை பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,டிசெ.29

தற்போதுள்ள நெருக்கடியான சூழலில் அத்தியாவசிய தேவையின்றி பொதுமக்கள் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு வருவதைத் தவிருங்கள் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.காண்டீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; பொதுமக்கள் முடிந்த அளவு மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்ப்பதுடன், குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோர் அவசிய தேவையைத் தவிர மருத்துவமனைக்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும். மேலும் மாதாந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளும் நோயாளர்கள் மாவட்ட மருத்துவமனைக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் வருகை தரவும். அத்துடன் வைரஸ் தாக்கத்தை கருத்தில் கொண்டு மருத்துவமனை வளாகத்தில் தொடர்ந்தும் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ-18)

# காட்டு யானைகள் அட்டகாசம்; விவசாயச் செய்கை பாதிப்பு

வவுனியா,டிசெ.29

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் காட்டு யானைகள் அழிவுகளை மேற்கொள்வதால் விவசாயச் செய்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அமதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்கள் உட்பட பல கிராமங்களில் காட்டு யானைகள் புகுந்து பயன்தரும் மரங்களை அழித்து சேதப்படுத்தி வருகின்றன.

இதேவேளை குளங்களின் அணைக்கட்டுகள், வாய்க்கால்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதன் காரணமாக மழைக்கு மத்தியிலும் விவசாயிகள் குளத்தின் அணைக் கட்டையும், வாய்க்கால்களையும் மண் மூடைகள் அடுக்கி பாதுகாக்கின்ற செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி2)

# பெண் தொழிலாளருக்கு வர்த்தக வலையமைப்பு

கொழும்பு,டிசெ.29

25 ஆயிரம் பெண் தொழில் முனைவோர்களைக் கொண்ட கிராமப்புற வர்த்தக வலையமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி, வதிவிட, பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த வலையமைப்பின் ஊடாக கொவிட் - 19 தொற்றை எதிர்கொண்டு, விநியோகத்தை வலுவானதாக செயற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் நலனைச் சிந்திக்காது செயற்படும் வர்த்தகர்கள் உள்ளனர். அதனைப் போன்று விவசாயிகள் மற்றும் விநியோகத்தர்கள் நலனைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் மற்றொரு தரப்பும் உள்ளது. எனவே நுகர்வோருக்கு சிரமத்தை ஏற்படுத்தாத மற்றும் அரசின் தீர்மானங்களை செயற்படுத்தும் வலையமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)



# ஆழிப்பேரலை நினைவேந்தல்

கிளிநொச்சி,டிசெ.29

ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்களின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், ஒருங்கிணைந்த பேண்தகு அபிவிருத்தி நிறுவனம், அமராபோரம் மற்றும் மகா சக்தி சம்மேளனம் ஆகியவை இணைந்து அலுவலக கலந்துரையாடல் மண்டபத்தில் உணர்வுபூர்வமாக அஞ்சலிகளை செலுத்தினர். (ஐ-21)

# 3,739 மெற்றிக் தொன் வெற்றிலை ஏற்றுமதி

கொழும்பு,டிசெ.29

இந்த வருடம் ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையில் 3 ஆயிரத்து 739 மெற்றிக் தொன் வெற்றிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்று ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் 2 ஆயிரத்து 792 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி பெறப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் (2019) 4 ஆயிரத்து 677 மெற்றிக் தொன் வெற்றிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் மூலம் 3 ஆயிரத்து 406 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டது.

வெற்றிலை உற்பத்தியில் 95 வீதமானவை பாகிஸ்தானுக்கும், அதற்கு மேலதிகமாக மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஆனந்த சுபசிங்க தெரிவித்துள்ளார். (க-இ)

# அதிருப்தி உள்ளது; ஆனால் விலகோம்!

## தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

அரசுடன் அதிருப்தி உள்ளது என்பது உண்மை. ஆனால் அரசில் இருந்து சுதந்திரக் கட்சி விலகப்போகின்றது என்று கூறுவதில் எந்த உண்மையும் இல்லை - என்று தெரிவித்துள்ளார் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர.

அரசாங்கத்திலிருந்து கொண்டு அதற்கெதிராகவே சிலர் சூழ்ச்சிகளைச் செய்கின்றனர் என்றும், 2015ஆம் ஆண்டு தேசிய அரசுடன் இணைந்து தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக சுதந்திர கட்சி செயற்பட்டமை மறக்கக்கூடிய விடயமல்ல என்றும், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிறிதொருவர் மீது விரல்நீட்டிக் குற்றஞ் சுமத்தும்போது ஏனைய விரல்கள் குற்றஞ்சுமத்துபவரை நோக்கியே காணப்படும். சுதந்திரக் கட்சி மீது குற்றச்சாட்டுக்களை முன் வைப்பவர்களும் இவ்வாறானவர்களே.



பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களின்போது அவற்றில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதில்லை என்று பலரும் எம்மிடம் தெரிவித்துள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அரசாங்கத்தின் வெற்றிக்காக சுதந்திரக் கட்சி பாடுபட்டிருக்கிறது. எனினும் தற்போது கீழ் மட்டத்திலுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு புறக்கணிக்கப்படுவது அதிருப்தியளிக்கிறது. ஆனால் அரசில் இருந்து விலகவுள்ளோம் என்ற தகவலில் உண்மையில்லை - என்றார். (ம-இ)

# 1.2 மில்லியனை கடந்தது பி.சி.ஆர்.



கொழும்பு,டிசெ.29

கொரோனாத் தொற்று நோயாளிகளை அடையாளம் காண, இலங்கையில் இதுவரை 1.2 மில்லியனுக்கும் மேற்பட்ட பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைவாக கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் 12 லட்சத்து 4 ஆயிரத்து 350 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதியே அதிக எண்ணிக்கையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-இ)

# ஜனவரி முற்பகுதியில் ஐ.தே.க செயற்குழு!

கொழும்பு, டிசெ. 29

ஐக்கிய தேசிய கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் ஷமல் செனரத் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது தொடர்பில் ஏற்கனவே அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அது குறித்த உத்தியோகபூர்வ கலந்துரையாடல் எதிர்காலத்தில் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)



# கட்டுப்பாடு இழந்த வாகனம் வல்லைக் கடலில் பாய்ந்தது!

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி கடல் உணவுகளை ஏற்றிச்சென்ற படி ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடல் நீரேரிக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது வாகனத்தில் பயணித்த இருவர் காயங்களுக்குள்ளான நிலையில், அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதி மற்றும் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கடல் நீரேரிக்குள் வீழ்ந்த வாகனத்தை கனரக இயந்திரத்தின் உதவியுடன் மீட்கும் பணியில் நெல்லியடிப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-25)

# இலங்கைக்கு நிபந்தனை விதித்தது அமெரிக்கா

கொழும்பு, டிசெ.29

எதிர்காலத்தில் இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதற்கு அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

அந்தவகையில் சீனாவின் அழுத்தங்களுக்கு எதிராக இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாத்தல், சமய மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனிடையே அமெரிக்காவின் நிதிச் செலவு சட்டமூலத்தை அந்த நாட்டு செனட் சபை திருத்தம் செய்துள்ளது. அமெரிக்காவின் கொரோனா வைரஸ் நிவாரணப் பொதி தொடர்பான நிபந்தனையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# 36 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, டிசெ.29

வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 36 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து 18 பேரும், கட்டாரிலிருந்து 16 பேரும், சவூதி அரேபியாவிலிருந்து 2 பேருமாக 38 இலங்கையர்கள் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 150 பேரும், மாலைதீவிலிருந்து 5 பேரும், பாகிஸ்தானிலிருந்து 4 பேரும் நாடு திரும்பவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ந-இ)

# தொற்றாளரின் சடலங்களை புதைக்க மன்னாரும் தெரிவு

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்காக நிலத்தடியிலிருந்து நீர்மட்டம் மிகவும் ஆழமாக இருக்கும் இரண்டு இடங்களைப் பரிந்துரைத்து அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மன்னார் மறிச்சுக்கட்டியும், கிழக்கு மாகாணத்தில் எரகம பிரதேசமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் தரை மட்டத்திலிருந்து 30அடி ஆழத்தில் கூட நீரைக் கண்டுபிடிக்க முடியாதென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)



# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகிறது கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு, டிசெ.29

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பு மருந்தை இந்தியாவில் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமானதும் ஒரு தொகுதி மருந்து இலங்கைக்கு வழங்கப்படலாம் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்ட காலநட்புறவைக் கருத்திற் கொண்டு இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் ஐந்து மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பெருமளவு கொரோனா வைரஸ் மருந்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சப்புகஸ்கந்த பகுதியில் 22 பேர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, டிசெ.29

சப்புகஸ்கந்த பகுதியில் தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த ஆறு வீடுகளைச் சேர்ந்த 22 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்ற போது அல்லது சிகிச்சையளிக்கப்படுகின்றபோது தப்பியோடுபவர்களுக்கு ஆதரவு வழங்கும் அனைவருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# ருவன்வெலிசாய தூபிக்கு நீர் சுத்திகரிப்பு நிலையம்!

கொழும்பு, டிசெ.29

இலங்கைக் கடற்படையால் முன்னெடுக்கப்படும் சமூக நலத் திட்டங்களின் ஒரு பகுதியாக ருவன்வெலிசாய வளாகத்தில் குடிதண்ணூர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் புனித மகா தூபிக்கு வருகை தரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுக்கேதென்னவின் அனுராதபுர விஜயத்தின் போது இந்த 800 ஆவது குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டு, பொதுமக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டது.

இதன் மூலம் பொது மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் முக்கிய மைல் கல்லை எட்டியுள்ளது.

இது சிறுநீரக செயலிழப்பை ஒழிப்பதற்கான பொருத்தமான தீர்வையும் கொண்டுள்ளது என்று கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலுக்கு அமைய முன்னெடுக்கப்படும் இத்திட்டத்துக்கு, கடற்படையின் தொழில்நுட்பத் திறன், பேருதவி வழங்குகின்றது. இந்த திட்டத்துக்கான நிதியுதவி சமூக பொறுப்பு நிறுவனங் கள் மூலம் திரட்டப்படுகின்றது. (ந-இ)

# மர்மமான முறையில் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ.29

நுளம்பு வலை தொங்கவிடும் கம்பியில் தொங்கிய நிலையில், சிறுவன் 12 வயதான ஒருவன் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப் பட்டுள்ளான். பிலியந்தலைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெற்றோர் வெளியில் சென்றிருந்த நிலையில், 6 வயதான சகோதரியுடன் இந்தச் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் இந்தத் துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரியவருகின்றது.

வீட்டுக்கு வந்த தாய், மகனைக் காணவில்லை எனத் தேடிய போதே, மகன் கம்பியில் துணியொன்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

மகனை மீட்ட தாய், மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது, சிறுவன் உயிரிழந்திருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பில் பிலியந்தலைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

# பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் கைதி உயிரிழப்பு

வெயாங்கொட, டிசெ.29

வெயாங்கொட பகுதியில் நேற்று காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேற்படி நபர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். குறித்த நபரை நேற்றுக் காலை வெயாங்கொடவில் உள்ள ஒரு இடத்துக்கு பொலிஸ் அதிகாரிகள் அழைத்துச் சென்றுள்ளனர். இதன் பின்னர் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை உயிரிழந்த சந்தேக நபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

உதயன் newuthayan.com





# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்

இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித்திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள்ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத்தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

கும்ப ராசிக்காரர்களுக்கு கடந்து செல்ல இருக்கும் 2020ஆம் ஆண்டு ஏற்படுத்திய தாக்கத்திலிருந்து மீள்வதற்கு வருகின்ற 2021ஆம் ஆண்டின் புத்தாண்டு பலன்களைத் தெரிந்துகொள்ள மிகவும் ஆர்வமுடன் இருப்பீர்கள். உங்களுடைய ராசிக்கு சனி பகவான் 12வது இடத்தில் அமர்ந்து இருப்பார். அது போல் குரு பகவான் ஏப்ரல் வரை உங்கள் ராசியிலும், அதன் பின்னர் பத்தாம் இடத்துக்கும் நகர்ந்து செல்கிறார். ராகு பகவான் நான்கிலும், கேது பகவான் பத்தாவது வீட்டிலும் அமர்ந்து இருப்பார்கள். மற்ற கிரகங்கள் அனைத்தும் பெயர்ச்சியாகிக் கொண்டே இருக்கும். இவ்வகையில் உங்களுடைய ராசிக்கு புத்தாண்டு எப்படி அமையப் போகிறது? என்பதை தான் இந்த பதிவின் மூலம் பார்க்க இருக்கிறோம்.

**குடும்பம்:** குடும்பத்தைப் பொறுத்தவரை தேவைகளுக்கு ஏற்ப பணத்தை தாராளமாக செலவு செய்வீர்கள். குடும்பத்தில் இருக்கும் நபர்களுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களை திருப்திப்படுத்துவீர்கள். சொந்த வீட்டில் இருப்பவர்கள் குடும்பத்தை பிரியும் நிலை ஏற்படலாம். வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கு அதிர்ஷ்டமான நேரமாக அமைய இருக்கிறது. உங்களுக்கு பிறகு பிறந்த உடன் பிறப்புகளிடம் மனக்கசப்புகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. கணவன் மனைவிக்கு இடையே வெளிப்படையாகப் பேசிக் கொள்வதன் மூலம் பாதி பிரச்சினையை தீர்த்து விடுவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்வதால் மன அமைதி பெறலாம்.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் கும்ப ராசிக்காரர்கள் ஏற்றத்தாழ்வுடன் பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். புதுப்புது விஷயங்களை கற்றுக்கொள்வதில் ஆர்வம் செலுத்தினால் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம். உங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் மற்றும் பங்குதாரர்கள் போன்றவர்கள் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பார்கள். சுய தொழிலில் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நல்ல லாபம் காண்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்களால் அனுகூலமான பலன்களைப் பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருக்கும் கும்ப ராசிக்காரர்களுக்கு இடமாற்றம் குறித்த விஷயங்களில் ஏப்ரல், மே மாதங்களில் சாதகமான பலன்களை கொடுக்கும்.

உங்களுடைய திறமைக்கு இதுவரை கிடைக்காத அங்கீகாரம், இனி நிச்சயமாக கிடைக்கப் போகிறது. உங்களிடம் இருக்கும் அறிவாற்றலை மற்றவர்கள் தெரிந்து கொண்டு பாராட்டுக்களை கொடுக்கப் போகிறார்கள். பதவி உயர்வு போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் ஆண்டின் இறுதியில் அமையும்.

**பொருளாதாரம்:**
பொருளாதாரத்தைப் பொறுத்தவரை திடீர் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் உண்டாகும். நீங்கள் செலவுகளை கட்டுக்குள் கொண்டுவர நினைத்தாலும் உங்கள் கைக்கு மீறிய செலவுகள் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் உண்டு. பொருளாதார ரீதியான சிக்கல்கள் ஆண்டின் தொடக்கத்தில் நிச்சயமாக இருக்கும். படிப்படியாக முன்னேற்றத்தைக் காண்பீர்கள். செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக செலவுகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு உண்டு. அதே சமயத்தில் வருமானம் குறையவும் சாத்தியக் கூறுகள் உண்டு. இவ்வாண்டு சுபகாரிய முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் நல்லது. வருகின்ற விரயங்களை சுப விரயமாக மாற்றிக்கொண்டால் பிரச்சினைகள் இருக்காது.

**பெண்களுக்கு:** பெண்களைப் பொறுத்தவரை கணவன் - மனைவி இடையேயான புரிதல் உண்டாகும். தன் கையே தனக்கு உதவி என்பது போல் உங்களுடைய தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் கைவிடாமல் மென்மேலும் மெருகேறுவதற்கு வாய்ப்புகள் அமையும். சுயமாக தொழில் செய்யும் பெண்களுக்கு ஏற்றம் தரும் அமைப்பாக உள்ளது. வெற்றி மேல் வெற்றியைக் குவிப்பீர்கள்.

**பரிகாரம்: கும்ப ராசிக்காரர்கள் உங்களுடைய ராசிக்கு இவ்வாண்டு மேலும் சிறப்பாக அமைய பசுவுக்கு தானம் செய்யலாம். சனிக்கிழமை தோறும் வாயில்லா ஜீவன்களுக்கு உணவு படைத்து வர நன்மைகள் நடைபெறும். வெள்ளிக்கிழமையில் மகாலட்சுமி பூஜை செய்து வர அதிர்ஷ்டங்கள் வந்து சேரும்.**

# ஈழத்துச் சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம்

கலைமாமணி ஆ.முருகேசு

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் சிவன் கோவில் வருடாந்த திருவம்பாவை மஹோற்சவம் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமானது. மார்கழி திருவாதிரை உற்சவம் பத்து நாள்கள் நடைபெறுகின்றது. காரைநகரின் வடகீழ்திசையில் கடற்கரைக்கு அண்மையில் திண்ணபுரம் என்னும் திருப்பதியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இது மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறப்புற்று விளங்குகின்றது. இலங்கையில் உள்ள சிவாலயங்களில் மிகவும் பழமையானதும், சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான காரைநகர் சிவன் கோவிலில் குடிகொண்டிருக்கும் சிவனையும், அம்பாளையும், சுந்தரேச பெருமாள் மற்றும் சௌந்தராம்பிகை அம்பாள் என்று அழைப்பர். இங்கு நடைபெறும் கிரியைகள் அனைத்தும் தென்னிந்திய சிதம்பரத்தில் நடைபெறுவது போல் சிறப்புற நடைபெறுகின்றது.

சிதம்பரத்தில் வீற்றிருக்கும் நடேசவர பெருமானுக்கு நடப்பது போல் இங்கும் ஆருத்ரா அபிஷேகம் நடைபெறுகின்றது. இந்த ஆருத்ரா அபிஷேகம் இன்று தேர்த் திருவிழாவை அடுத்து வரும் விடியற்காலையில் நடைபெறும். திருவாதிரைத் தினத்தில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமானைக் காணும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதை ஆருத்ரா தரிசனம் என்பார்கள். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தியின் திருவுருவம் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களுடன் கூடி சிவகாமி அம்பாள் சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் அமைந்துள்ளது.



இந்தியாவில் கூட இரண்டொரு ஆலயங்களில் மட்டுமே திருவுருவம் காணப்படுகின்றது. இந்த நடராஜ திரு உருவத்துடன் சேர்ந்த திருவாசி 50 சுடர்களை கொண்டிருக்கின்றது. மங்கள வாத்தியம் கலைஞர்களின் வல்லவாரி இசையுடன், சிவகாமி அம்பாள் சமேத நடராஜ மூர்த்தி இதர மூர்த்திகளுடன் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் இவ்வாலயத்தில் பஞ்சரத பவனி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. முதலாவது தேரில் விநாயகப் பெருமான், முருகப்பெருமான் வீதி உலா வருவர். இரண்டாவது தேரில் அரிகரபுத்திரன் என்று போற்றப்படும் ஐயனார் வீதி உலா வருவார். மூன்றாவது தேரில் ஆடல்வல்லான் நடராஜ பெருமான் வீதியுலா வருவார். நான்காவது தேரில் சிவகாமி அம்பாள் வீதி உலா வருவார். ஐந்தாவதாக மணிவாசகப் பெருமான் தேர் வீதி உலா வருகின்றது. இந்த ஐந்து ரதம் வீதி உலா வரும் காட்சி பக்தர்களின் உள்ளங்களில் மெய் சிலிர்க்க வைக்கும். இவ்வாலயத்தில் இரண்டாம் வீதியிலுள்ள அரச மரமே தல விருட்சமாகும். இந்த அரச மரத்தடியில் தான் இந்த ஆலயத்தில் தெய்வ வழிபாடு ஆரம்பம் ஆனதாக ஆன்றோர்கள் கூறுவார்கள். இங்கு மூன்று முறை பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. முதலாவது பிரம்மோற்சவம் பங்குனி உத்திரத்தில் பத்து நாள்கள் நடைபெறும். இரண்டாவது பிரம்மோற்சவம் துணையுடன் பத்து நாள்கள் நடைபெறும். பங்குனி மாத உற்சவ தேர்த் திருவிழாவில் சோமாஸ்கந்த மூர்த்தி வீதி உலா வருவார். மார்கழி மாதம் நடைபெறும் மகோற்சவத்தில் நடராஜப்பெருமான் வீதி உலா வருவார். மூன்றாவது மகோற்சவம் ஆடி மாதத்தில் சௌந்தராம்பிகை அம்பாளுக்கு வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. மூன்றாவது மகோற்சவத்தில் சௌந்தராம்பிகை அம்பாள் தேர்த் திருவிழாவின் போது வீதிஉலா வருவார். சிவனின் பெருமையை திருமூலர் பின்வருமாறு கூறுகிறார் "சிவனோடு ஒப்பான தெய்வம் தேடினும் இல்லை அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும் தவனச் சடைமுடித் தாமரை யானே" என்று கூறுகிறார். சிவன் அருளே கண்ணாகக்கொண்டு இறைவனின் திருப்பாதம் அடைவோம்.

# அடக்கத்தில் ஆதாயம் பெற அரசியல்வாதிகள் முயற்சி

## ஆனந்த தேரர் சாடல்



கொழும்பு, டிசெ.29
கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளின் ஊடாக அரசியல் இலாபம் பெற சில அரசியல்வாதிகள் முயல்கின்றனர் என அஸ்கிரிய பீடத்தின் பிரதி பதிவாளர் நாரம்பனவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை என்ன செய்வது என்பது தற்போது தீர்வு காணமுடியாத புதிராக மாறிவிட்டது. தற்போதைய நிலையில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பிரிவினைகளை உருவாக்காமல், எந்த சக்திக்கும், செல்வாக்குக்கும் அடிபணியாமல் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கொரோனாப் பாணி தயாரிப்பு; கைவிட்டார் தம்மிக பண்டார

கொழும்பு, டிசெ.29
கொரோனாத் தடுப்புக்கான ஆயுள்வேதப் பாணியைத் தயாரிக்கும் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து விலகுகிறேன் என கேகாலை மருத்துவர் தம்மிக பண்டார அறிவித்துள்ளார்.
இந்த மருந்துத் தயாரிப்புக்காக தனது சொந்தப் பணத்திலிருந்து 2 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.
இந்த நிலையில், தனக்கு ஆதரவளிக்க எவரும் முன்வராமையால் இந்த மருந்துத் தயாரிப்பிலிருந்து விலகுகிறேன் என வரக்காபொல பிரதேச சபையின் தவிசாளர் உள்ளிட்டவர்களிடம் தம்மிக பண்டார அறிவித்துள்ளார். எனினும், தான் வசிக்கும் பிரதேசத்திலுள்ள அனைவருக்கும் இந்த மருந்தை வழங்கிய பின்னரே இந்த மருந்துத் தயாரிப்பை முழுமையாகக் கைவிடுவேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

## தனிமையிலுள்ளோருக்கு உலருணவுப் பொதிகள்



யாழ்ப்பாணம், டிசெ.29
கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியவை இணைந்து 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டம் மூலம் கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைத்துள்ளன.
இளவாலை வடமேற்கு ஜே/222 கிராம சேவையாளர் பிரிவில் வசந்தபுரம், கூவில்,நல்லிணக்கபுரம் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் 30 குடும் பங் களுக்கே இவ்வாறு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-222)

## காலியில் மூடப்பட்டது ஆடைத்தொழிற்சாலை

### அடையாளம் காணப்பட்டனர் புதிய தொற்றாளர்கள்

காலி, டிசெ.29
காலி நகரில் அமைந்துள்ள ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், குறித்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் மிலித்துவ பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இதையடுத்து அந்தப் பெண்ணின் இணைப்பாளர்களுக்குத் தொழிற்சாலையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேருக்குத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.
அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்கள் 9 பேரில் 6 பேர் காலி நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்து வருபவர்கள். ஏனையோர் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ந-இ)

## பிரபல சிங்கள பாடகர் காலமானார்

கொழும்பு, டிசெ.29
பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் முத்துனமகே தனது 73 ஆவது வயதில் காலமானார்.
இவர் நீர்கொழும்பிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இலங்கை ரூபா பெறுமதியில் சரிவு

கொழும்பு, டிசெ.29
2020 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 24 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபா 4.5 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இதேவேளை, இந்தக் காலப்பகுதியில் யூரோவுக்கு நிகரான இலங்கை ரூபா 12.3 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது.
ஜப்பானிய ஜென்னுக்கு நிகராக 9.0 வீதமும், ஸ்ரேலிங் பவுணுக்கு நிகராக 7.8 வீதமும், இலங்கை ரூபா மதிப்பிறக்கமடைந்துள்ளது.
இந்திய ரூபாவுக்கு நிகராக இலங்கை ரூபா 1.1 வீதம் மதிப்பிறக்கமடைந்துள்ளது.
கடந்த சில தினங்களாக பணப் பரிமாற்ற வீதங்கள் தேவையற்ற வகையில் ஏற்ற, இறக்கம் கண்டுள்ளன. இதனால், வேறு நடவடிக்கை எடுக்கும் அதேவேளையில் தேசிய அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ந-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** பெண்கள் விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். மனம் நிறையும். எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும். வங்கிக்கடன் உதவி கிடைத்து புது வீடு வாங்குவீர்கள்.

**இடபம்:** அரசாங்க விஷயங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். மனைவி உங்களுடைய முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பார். தந்தையின் உடல்நலம் சீராகும்.

**மிதுனம்:** உறவினர்களுடன் இருந்த மோதல் போக்கு மறையும். மகனுக்கு எதிர்பார்த்தபடி நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். உயர்ந்த குடும்பத்திலிருந்த நல்ல பெண் அமைவார்.

**கடகம்:** உங்களின் அவசர முடிவால் சிரமங்கள் ஏற்படக்கூடும். நண்பர்கள் என்று நம்பியவர்களால் சிறு சிறு ஏமாற்றம் ஏற்படும். இளைய சகோதரர் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி வரும்.

**சிம்மம்:** பணியிடத்தில் உயர் பதவிக்கு உங்களுடையபெயர்பரிசீலிக்கப்படும். பொருளாதார விஷயத்தில் ஓரளவு திருப்பத்தைக் காண முடியும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைப்பளு உண்டாகும் நாள்.

**கன்னி:** அவசரப் பயணம் ஒன்றை இன்று மேற்கொள்ள நேரிடும். பணியாளர்களுக்கு நினைத்தது நிறைவேற சிரமம் ஏற்படும். உங்களின் கடின உழைப்பால் மேன்மை அடைவீர்கள்.

**துலாம்:** மிகவும் துல்லியமாக கணக்கிட்டு பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். எதிர்பாராத பணம் வந்து சேரும். புண்ணியத்தலங்களுக்கு சென்று வருவீர்கள். உற்சாகம் பிறக்கும்.

**விருச்சிகம்:** மனநிறைவு ஏற்படும். உங்களின் முயற்சிக்கு நல்ல பலன் உண்டு. மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் நல்ல வேலை கிடைக்கும். வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும்.

**தனுசு:** புதிய நிறுவனத்திலிருந்து சிலருக்கு அழைப்பு வரும். அவசரம் வேண்டாம். எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் எண்ணங்கள் நிறைவேறும்.

**மகரம்:** மனநிறைவான நாள். பெற்றோரின் உடல் நலம் மேம்படும். பேச்சுவார்த்தையில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. மனஅழுத்தம் நீங்கும்.

**கும்பம்:** பணியிடத்தில் கடமைகளைச் சரியாக செய்து முடிப்பீர்கள். திருப்தியான நாள். அலுவலக பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள்.

**மீனம்:** பலகாலம் தள்ளிப்போன விஷயங்கள் உங்களின் முயற்சியால் நிறைவேறும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். யாரிடமும் நிதானத்தை இழந்து கோபத்தோடு பேச வேண்டாம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை கல்விசாரா ஊழியர் **செயமாலை ஜெறின்சனின்** பாசமிகு தந்தையார்

**அலெக்ஸ்சாண்டர் செயமாலை**

25.12.2020 காலமாகிவிட்டார். இத் துயரில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**
**அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்.**

## மரண அறிவித்தல்



**கௌரி மகேந்திரராசா**

வட்டு கிழக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கௌரி மகேந்திரராசா 28.12.2020 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இரத்தினவள்ளி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மருதபிள்ளை- திலகவதியம்மா ஆகியோரின் மருமகளும், மகேந்திரராசாவின் அன்பு மனைவியும், கஜனி, பிரதீபா, யுவராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயசங்கர், சேரன், ஹரிநிவேதா ஆகியோரின் அன்பு மாமியும், சிவசக்தி, காலஞ்சென்றவர்களான திருநாதன், சிறிதரன் ஆகியோரின் அன்பு சகோதரியும், கனுஷ்திகன், வதுர்சிகா, பிரியங்கன், பிரவீன், லஷந்திகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2020) முற்பகல் 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஊர்மணியம்ஸ்,**
**வட்டு கிழக்கு, சித்தன்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
**19 • 02 • 1930**



**இறப்பு**
**28 • 12 • 2020**

### திருமதி ஞானசுந்தரம் நாகரஞ்சிதம் (பவா)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கலட்டி முந்தல் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஞானசுந்தரம் நாகரஞ்சிதம் (பவா) அவர்கள் நேற்று (28.12.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-யோகரத்தினம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற மார்க்கண்டு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் அவர்களது அன்பு மனைவியும், காலஞ்சென்ற வசந்தி மற்றும் ஆனந்தகுமார், ஜெயந்தி, தமயந்தி, ஞானகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தலையசிங்கம் மற்றும் ராஜினி, ஜெகசீலன், சுமிதமலர், சுபித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞானரஞ்சிதம் மற்றும் காலஞ்சென்றவர்களான ஜெகதீசன், நகுலேஸ்வரன், பரமேஸ்வரன், சிவநேசன், விமலவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தவமணியின் அன்பு மைத்துனியும், அர்ச்சுனா, சாயிஜனனி, பிரபாகரன், அர்ச்சனா, பானுதி, தினேஷ், டினேஸ், பிரபாகரன், ஜனனி, ஜனந்தன், ஜனாலன், பிரதீபா, வசந்ததீபா, யதுர்ஷன், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அபிமன்யு, ஆதிரா, பிருத்திகா, கேஷிகா, கிருஷ்ணி, ஆதீஸ், சஹான் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**9/5, கலட்டி முந்தல் லேன், கொக்குவில் கிழக்கு.**
**தொ.இல: 021 222 0118**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### பொன்னாலை வரதராஜப்பெருமாள்

# அர்ச்சகர், பரிபாலன சபையினர் கோவிலில் தனிமைப்படுத்தலில்

கொடிகாமம், டிசெ. 29

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்ற மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவத்தில் தனியாள் இடைவெளி பேணப்படவில்லை என்ற காரணத்தால் அர்ச்சகர்களும் கோவில் பரிபாலன சபையினரும் கோவிலில் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.



கோவிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே அவர்கள் கோவிலில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். பக்தர்கள் கோவிலுக்குள் செல்லமுடியாது. வெளியே நின்று வழிபாடுசெய்து திரும்பமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தடுப்பு செயலணியால், திருவிழாக்களின்போது 50 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. நுழைவாயிலில் பதிவுசெய்யப்பட்டு 50 பேர் மட்டும் கோவிலினுள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், திருவடிநிலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்ற தீர்த்தோற்சவத்தின்போது கோவிலுக்கு வருகைதராமலேயே வேறு மார்க்கங்களால் பக்தர்கள் அங்கு சென்றிருந்தனர்.

ஏற்கனவே கடலுக்கு சென்று நீராடிக்கொண்டிருந்த பலர் சுவாமி தீர்த்தமாடச் சென்றபோது திடீரென அங்கு சென்று சுவாமியை சுற்றிநின்று வழிபட்டனர். தனியாள் இடைவெளி பேணப்படாமை மற்றும் முகக்கவசம் அணிந்திருக்காமை பற்றி கொரோனாத் தடுப்பு செயலணிக்கு சமூக ஆர்வலர்கள் சிலர் முறைப்பாடு செய்திருந்தனர் இதைத் தொடர்ந்து மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, சுகாதாரத்துறையினரின் நடவடிக்கைகளுக்கு தாம் ஒத்துழைப்பை வழங்குவோம் என்று கோவில் பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (த-26.159)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### தாயும்...

என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த ரமேஸ் ஜெயலலிதா (வயது 42), அவரது மூன்று வயது மகளான றிதுர்சனா ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பெண்ணும், அவரது மூன்று பிள்ளைகளும் நேற்று வீட்டில் இருந்துள்ளனர். கணவர் வீட்டில் இல்லை. இரவு 12 மணியளவில் தாயையும், சகோதரியையும் காணாத அவரது மூத்த மகள் அருகிலிருந்த தனது அப்பம்மாவிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர்கள் வந்து தேடியபோதும் இருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதன்பின்னர் ஊர் மக்களும் தாயையும் பிள்ளையையும் தேடியுள்ளனர். நீண்ட நேரத்தின் பின்னர் அவரது வீட்டுக்கு அருகில் இருந்த வயல் கிணற்றுக்கு அருகில் துவாய் ஒன்றும், குடை ஒன்றும் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து சந்தேகமடைந்த பொதுமக்கள் ஓமந்தைப் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

அங்கு வந்த பொலிஸார் நீர்ப்பம்பிகளின் மூலம் கிணற்று நீரை வெளியேற்றிவிட்டு, கிணற்றுக்குள் இறங்கிதேடுதல் நடத்தினர். இதன்போதே தாயினதும் குழந்தையினதும் சடலங்கள் கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்டன.

சடலங்களைப் பார்வையிட்ட நீதிவான் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப் பணித்தார். மீட்கப்பட்ட சடலங்கள் வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

அதேவேளை, உயிழந்த பெண் அவரது மூத்த மகளுக்கு எழுதினார் என்று சொல்லப்படும் கடிதம் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஒ,110)

### கடற்படை...

கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்புத் தெரிவிக்கின்றது.

அவர்கள் சில நாள்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் விசாரணையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 23ஆம் திகதி நடந்துள்ளது. தங்களை கடற்படையினர் என்று அறிமுகப்படுத்திய சிலர், வீட்டில் கஞ்சா உள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது, அது தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்து வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி வீட்டிலிருந்தவர்க்ள அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர். தோடுகள், மோதிரம் என சுமார் 5 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த வீட்டில் குடும்பத்தலைவர் இறந்து சுமார் ஒரு மாதமே ஆகியிருந்த நிலையில், கொள்ளையர் தம் கைவரிசை காட்டியுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கும் அங்குள்ள கடற்படையினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. கடற்படையினரின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளை இடம்பெற்றதால் அங்கு அச்சம் பரவியது. இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். விசாரணையின் அடிப்படையில் மூவர் அவர்களால் கைது செய்யப்பட்டனர். பின்னர் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் அனலைதீவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. விசாரணையின் பின்னர் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் தற்போதும் பொலிஸ் காவலில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேநபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அவர்கள் நீதிமன்றில் விரைவில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

### புதிய...

நிறுத்தப்படுவதற்கு முன்னரே அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தனர். தனிமைப்படுத்தலில் இருந்த அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,இ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் காணி மாவட்டப் பதிவக அலுவலகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றும் **திருமதி ஏ.எம்.எக்ஸ் அன்ரனிற்றா** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி லலித்தா அலெக்சாண்டர்**

அவர்கள் கடந்த 27.12.2020 (ஞாயிற்றுக்கிழமை) இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி மரியதாஸ் பிரேமாவதி**
அவர்களின் அன்புத் தாயார்

**பாலசிங்கம் சிவக்கொழுந்து**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி வித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்**
**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம் - பிரதேச செயலகம் வேலணை.**

## 54 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்




**கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்**

இன்று (29.12.2020) தனது 54 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் கொடிகாமம் பருத்தித்துறை வீதியை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட தனது மாமனுடன் காணப்படும் அருள்வாக்குச் சித்தர் **கணபதிப்பிள்ளை ஏகாம்பரம்** அவர்களை நீடூழிகாலம் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**அடியார்கள்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21
02
1947



விண்ணில்
29
12
2019

**அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன்**
(ஓய்வுநிலை அபதிர்)

கருணை மிகு பண்பதனால் கருத்தில் நின்றீர்
கண்ணிமைபோல் எமக்கிருந்து காவல் செய்தீர்
பெருமையுறப் பேணி எமை பேரன்பு ஊட்டி
பேதலிக்க விட்டெங்கே போய்விட்டீர்கள்
அமைதியாக இறைவன் பாதங்களில்
வீற்றிருக்க வேண்டுகிறோம்.

**கண்டி வீதி,**
**நுணாவில் கிழக்கு,**
**சாவகச்சேரி.**

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

## 81 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




**81 ஐயம்பிள்ளை சண்முகம்**
(நெடுந்தீவு 4 ஆம் வட்டாரம்)

இன்றுபோல் என்றும்
சீரும் சிறப்புடனும் வாழ
மனதார
வாழ்த்துகின்றோம்.




நீடூழிகாலம் வாழ
வாழ்த்துவோர்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

**இல. 63/01, சிவன்கோயில் வீதி,**
**தோணிக்கல், வவுனியா.**

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

லிங்கநாயகம் மங்கையற்கரசி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**சாரங்கன் (சாரு)**

மலர்வு 22.06.1989 — உதிர்வு 28.12.2012

திதி: புரணை (29.12.2020)



ஓடி உருண்டது உமைப்பிரிந்து எட்டாண்டு
வாடி வதங்குகின்றோம் உமை
- எண்ணி நிதம்
எட்டாண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
- சென்றாலும்
எம்நெஞ்சமதில் சாரு உங்கள் நினைவுகள்
- நிலைத்திருக்கும்

**குடும்பத்தினர்**
**3 ஆம் வட்டாரம், நெல்வரை,**
**நெடுந்தீவு.**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



**செல்வி சகானா சூரியகுமார்**

திருநெல்வேலி பத்திரகாளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சகானா சூரியகுமார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (27.12. 2020) அன்று காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் சூரியகுமார், மகாலட்சுமி தம்பதியரின் புதல்வியும், சர்மிளா (கிழக்கு பல்கலைக்கழக மாணவி) மதுக்சன், மதுசக்சனா (யாழ் இராமநாதன் நுண்கலைப் பீட மாணவி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்திரகாளி கோவிலடி,**
**திருநெல்வேலி கிழக்கு**
**077 4199 662, 071 9623 296**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## தடுத்து நிறுத்தப்பட்ட ஐயப்ப மண்டல பூசை

வவுனியா, டிசெ. 29

வவுனியா கனேசபுரம் கிராமத்திலுள்ள ஐயப்பன் கோவிலில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுடன் 100க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட மண்டல பூசையை சுகாதாரப் பிரிவினர் நேற்று இரவு 8.30 அளவில் தடுத்து நிறுத்தினர்.

நெளுக்குளம் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அங்கு விரைந்த இரு தரப்பினரும் பூஜையை இடைநிறுத்தினர். அதில் கலந்து கொண்டவர்களின் பெயர் விவரங்களை பதிவுசெய்தனர்.

சுகாதார விதிமுறைகளை மீறி தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமையால் அவர்களை தனிமைப்படுத்துவது குறித்தும் பரிசீலித்து வருகின்றோம் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (த-18)

## நாளை உர விநியோகம்


கிளிநொச்சி, டிசெ. 29

முல்லைத்தீவு உடையார்கட்டு கமநலசேவை நிலையத்தின் இந்த ஆண்டு காலபோக நெற்செய்கைக்கான இலவச மானிய உரம் நாளை புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் ஆயிரத்து 235 ஏக்கரிலும் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் 90 ஏக்கரிலும் மானவாரியாக 2 ஆயிரத்து 475 ஏக்கரிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பயிர்ச் செய்கைக்கான இறுதி உர விநியோகமே நாளை வழங்கப்படவுள்ளது என்று உடையார்கட்டு கமநலசேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி அலுவலர் சு.பிரபாகரன் அறிவித்துள்ளார். எனவே உரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சகல விவசாயிகளையும் அவர் கோரியுள்ளார். (த-ரி-2)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



பிறப்பு 28.12.1943

இறப்பு 29.11.2020

## திரு. பொன்னர் பரசுராமன்

உரும்பிராய் மேற்கு அன்னுங்கை. பூதராயர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் - பரசுராமன் அவர்கள் 29.11.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுக்கிரிகைகளில் வந்து கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் 31.12.2020 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

077 706 2009

பிள்ளைகள்
உறவினர்கள்

## தொலைந்து விட்டது

கஸ்தூரியார் லேன். இல-7 ல் வசிக்கும் கந்தையா நவரத்தினம் ஆகிய எனது ஆள் அடையாள அட்டை (491932813 V). சாரதி அனுமதிப்பத்திரம் ஆஸ்பத்திரி வீதியில் தொலைந்து விட்டது. அதை எடுத்தவர்கள் 222. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு, கடை வாடகைக்கு

நாவற்குழி (A9) கண்டி வீதியில் (சிவபூமி ஆலயத்திற்கு அருகில்) வீடு. கடை என்பன வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 077 167 9880

## ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்
T.P:077 658 9443 யாழ்ப்பாணம்

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பஞ்சலிங்கம் செல்வராஜா**
(முன்னாள் சாரதி DI, இலங்கை போக்குவரத்து சபை)

*திதி: பூரணை (29.12.2020)*

தோற்றம் 13.06.1946

மறைவு 20.12.2010

ஆண்டுகள் பத்து நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
நீங்கி விடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்! - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 29.11.2020 அன்று இறைபதமடைந்த கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி ஐயாத்துரை பொன்னம்மா

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இரங்கல் தெரிவித்தோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதிப்பு 18.03.1927

உதிர்வு 29.11.2020

"உதயவாசா"
மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சாந்தினிதேவி ஜெராட்**
அவர்களின் அன்புக் கணவர்

## திரு.ஜெராட் ஜோசப்



அவர்கள் 27.12.2020
ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்தார்.
அவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மாவிற்கு நித்திய
இளைப்பாற்றியை அளித்தருள
வேண்டுமென இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்,**
**யா/ கொழும்புத்துறை**
**சென். ஜோசப்ஸ் வித்தியாலயம்**

# கண்ணீர் காணிக்கை...

எமது ஆலயத்தின் பிரதமகுருவும் பரிபாலன சபை உறுப்பினருமாகிய

## பிரம்மஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் ஜெயந்திநாதக் குருக்கள்



எமது ஆலயத்தில் நீண்ட பாரம்பரியத்தில் பரம்பரையாக குருத்துவ கடமையினை செய்து வந்தவர்கள் வழியினிலே எமது ஆலயத்திற்குரிய தனித்துவத்தினையும் பாதுகாத்து ஆலய வளர்ச்சிக்கும் நிர்வாகத்திற்கும் பெரும் துணையாக விளங்கி அடியவர்களின் மகிழ்ச்சிக்கு நட்புறவாக பழகி புனிதமான இறை பணியை செம்மையுடன் செய்து எல்லோரது நன்மதிப்பையும் பெற்ற குருக்கள் அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகவுள்ளது.

மேலும் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப்பிள்ளை யாரை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !*

நம்பிக்கை பொறுப்பாளர்,
பரிபாலன சபையினர்
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் - கைதடி.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.11.1957

உதிர்வு
23.12.2018

## திருமதி தங்கமலர் சிவசுந்தரராசா

*திதி: சதுர்த்தசி*

ஆண்டொன்று இரண்டானதோ!
- அன்பே ஆறவில்லை எம் துயரம்
மாற்றமின்றி உன் நினைவால்
மனம் வெம்பி நிற்கின்றோம்
எம் அகத்தில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே.

சந்தம் புளியடி,
காரைநகர்.

வேலுப்பிள்ளை
சிவசுந்தரராசா (கணவர்)
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## தம்பு சோமசுந்தரம்



பிறப்பு
20 . 01 . 1940

இறப்பு
10 . 01 . 2020

**திதி: மார்கழி**
**பூரணை (29.12.2020)**

ஆண்டாண்டு போனாலும் உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்
நீங்கள் எம்மை அன்புடன் வளர்த்து
எம்மை அவனியில் முன்னைப் படுத்தியதற்கு
நன்றி கூறுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 05 . 1994

மறைவு
24 . 12 . 2015

## அமரர் சிறீரஞ்சன் யதுர்சன்

*திதி: 29.12.2020 பூரணை*

*நெஞ்மதில் நிலைத்து நின்று*
*எண்ணமதில் என்றும் நிலைத்து*
*வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்*
*கண்ணிமைக்கும் காலத்துள்*
*காலனுமைக் கவர்ந்து சென்ற*
*கொடுமையை எண்ணிக் கலங்குகிறோம்*
*மனம் வெதும்பி வாடுகின்றோம்*
*ஐந்தாண்டுகள் சென்றபின்னும்*
*என்றும் அழியா நினைவுகள்*

**இக்கிரானை,**
**கந்தரோடை, சுன்னாகம்   குடும்பத்தினர்**

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 02 . 1925

மறைவு
17 . 12 . 2013

## அமரர் அருணாசலம் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர்,
புல்லாங்குழல் வித்துவான், கலாபூஷணம்,
வேணுகானமணி)

*திதி:—பூரணை (29.12.2020)*

அன்பாலும், பண்பாலும் இனிய புன்னகையாலும்
அனைவர் இதயத்திலும் நிறைந்த எம் அன்புத்
தெய்வமே!
கல்விக்கும், கலைக்கும் நீங்கள் ஆற்றிய தொண்டை
என்றும் மறவாது உங்களுடன் உறவாடிய
அன்புள்ளங்கள்,
வானுறையும் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் உங்களின்
அன்புருவம் என்றென்றும் நிலைத்திருக்கும்
எம் மனத்திரையில்

*ஓம் சாந்தி!*

*என்றும் மாறாத நினைவுகளுடன்*

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**435/3, கோயில் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

## கனியவள அகழ்வை எதிர்த்து மன்னார் மக்கள் போராட்டம்!

மன்னார், டிசெ.29
ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட நிறுவனம் ஒன்று மன்னார் தீவில் கனியவள மண் அகழ்வு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி மன்னார் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாப்போம் அமைப்பு ஆகியனவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான மனு மற்றும் மாவட்டச் செயலருக்கான மனு என்பன மன்னார் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டன. கனியவள மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்துப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (ஒ.60)

## மீண்டும் சஜித்

கொழும்பு, டிசெ.29
2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாசவே போட்டியிடுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 2024 ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது தரப்பு வேட்பாளரின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். கட்சி மற்றும் கூட்டணியின் தலைவர்தான் வேட்பாளராக களமிறங்குவது சம்பிரதாயம்.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பதவி வகிக்கின்றார். எதிர்காலத்தில் அமையவுள்ள கூட்டணியின் தலைவராகவும் அவரே செயற்படுவார். சஜித் தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பது தெளிவு. தேர்தலை எதிர்கொள்வதற்கான பலமான வேட்பாளரும் அவரே. அவரைவிட மாற்றுவழி இல்லை. அதற்கான தேவையும் எழாது என்றார். (ஒ.44)

## முடக்கப்பட்டது மவுன்ஜின் தோட்டம்

கொழும்பு, டிசெ.29
அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வட்டவளை, மவுன்ஜின் தோட்டம் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த மவுன்ஜின் தோட்டத்தில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்ஆடைத் தொழிற்சாலையில் இதுவரை 59 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்தே அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளது. (எ)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 | 28 |
| 06 | 12 |
| 1928 | 2020 |

### திருமதி கனகரட்ணம் தங்கரத்தினம்

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் காளிகோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் தங்கரத்தினம் நேற்று (28.12.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, ஐயாத்துரை, பொன்னுத்துரை, செல்லத்துரை, இரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அமிர்தலிங்கம் (Ratnam Lorry Builders - Manipay) காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிர்மலாதேவி (ஆச்சி), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ரஜினி பீடா ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி) ஆகியோரின் மாமியாரும், ஹிமாலினி, மாவேந்தன், கீதாஞ்சலி, நிதுர்ஷன், அகல்யன் (DFCC வங்கி-மானிப்பாய்), துஷாந்த் (UK) ஆகியோரின் பேர்த்தியும், நக்ஷத்திரா, மவிஷ்கா, டீக்ஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை கனகசபை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கனகசபை வீதி, மானிப்பாய்.**
**076 132 9061**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 28 |
| 05 | 12 |
| 1945 | 2020 |

### திரு. அலேஸ் ஜோண்கெற்பிக்கன்

(யோகராசா)

சென்.ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அலேஸ் ஜோண் கெற்பிக்கன் (யோகராசா) அவர்கள் நேற்று (28.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அலேஸ் திரேசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைமுத்து சவிராசி தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிமெக்டலீன் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு கல்வி வலயம்) ஜேம்ஸ் அருள்மதி (பணியாளர் உதயன் பத்திரிகை நிறுவனம்-வவுனியா) காலஞ்சென்ற ஜெஸ்ரிந் ஜெயமதி மற்றும் மேரிமக்ரன் சலீன் (உளவளத்துணை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் -திருகோணமலை) பிலிப் யோகமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்மேலம்மாவின் அன்புச் சகோதரனும், ஜெயக்கெனடி (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் மாவட்டச் செயலகம் - வவுனியா) மாவளன் (பொறியியலாளர் டோக்கியோ சீமெந்து கம்பனி - திருகோணமலை) புஸ்பமலர் (காப்புறுதிச் சபை மாவட்டச் செயலகம் - வவுனியா) சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கெனத் கெஜான், கெனுஷந், வருணவி, கிஷோரன், தன்ஷிகன், அபிஷ்வர்ஜா, அத்ணிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் மகாதேவன் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ் வசாவிளானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 4 மணிக்கு வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி தெற்கு, வசாவிளான்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 277 2726**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் மயில்வாகனம்

**நயினாதீவு**

**(ஓய்வுபெற்ற தபாலதிபர், செயலாளர் - கருணை இல்லம் உரும்பிராய்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மற்றும் வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் அவர்கள் 27.12.2020 ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அமராவதி தம்பதியரின் அன்பு மகனாரும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சவுந்தரம் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை உரும்பிராய் இந்துக் கல்லூரி) அவர்களின் ஆருயிர் கணவரும், ரமணி (முன்னாள் சுருக்கெழுத்தாளர் பல்கலைக்கழக கல்லூரி, வவுனியா.-லண்டன்), மனோகரி (ஆசிரியை, பரிசுத்த திருத்துவக் கல்லூரி, நுவரெலியா) பகீரதி (மருந்தாளர் தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை NMRA கொழும்பு), மயூரதி (முன்னாள் ஆசிரியை, யா/மண்டைதீவு மகா வித்தியாலயம், பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பாகரன் (முன்னாள் ஆசிரியர், றாகலை தமிழ் வித்தியாலயம், லண்டன்), குபேரன் (ஆசிரியர் நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா) சிவானந்தன் (ஜனதா ஸ்ரீல் - கொழும்பு), செந்தில்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜன் (லண்டன்), அபிராமி (லண்டன்) இலக்கியா, அனுசிகன், அக்சிகன் அக்சரன் (பிரான்ஸ்) அக்சிதா (பிரான்ஸ்) அபிசரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற யோகம்மா-பாலசிங்கம் (சிவநெறிச் செம்மல்) செல்வராணி மற்றும் கலாபூசணம் கனகரெத்தினம் (ஓய்வுபெற்ற கணக்குகள் சரிபார்த்தல் தலைமை அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அருள்நெறிச் செம்மல் சி.நா.மதியாபரணம் சமாதான நீதவான் மற்றும் லேவாதேவி, தில்லைநாயகி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை) காலஞ்சென்ற கிருஸ்ணசாமி, கனகம்மா, மற்றும் சரஸ்வதி, பெரியநாயகி (மருத்துவர், நீர்கொழும்பு) ஆறுமுகம் (ஓய்வுபெற்ற உதவி சாலை முகாமையாளர் இ.போ.ச - கோண்டாவில்) குணபூஷணி, கதிரேசப்பிள்ளை (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் -வேலணை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி சொர்ணலிங்கம், நடராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் திலகவதி, வரதலட்சுமி (ஓய்வுபெற்ற அதிபர்-யா/ இளையதம்பி இந்து வித்தியால யம்) ஆகியோரின் அன்புச் சகலனும் மதியாபரணம் - யோகம்மா, குழந்தைவடிவேல் வள்ளிப்பிள்ளை, திருநாவுக்கரசு - சரஸ்வதி, பரமலிங்கம்- தவமணி ஆகியோரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.12.2020 புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் தெகிவளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**17/2, சார்ளிமன் வீதி, வெள்ளவத்தை.**
**கொழும்பு - 06**

**தொடர்புகளுக்கு:**
**077 6974324, 0112 503559 (மனைவி)**
**0777 244 997 (சகோதரன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## இனுவிலில்...

பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்றாளர் இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றுடன் இனங்காணப்பட்டவர் மருதனார்மடம் சந்தைக்குள் உள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றுபவர். இவர் கடந்த 14 நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார் என்றும், 14 நாள்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தத் தொற்றாளருடன் சேர்த்து மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 110 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை, நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 426 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும், யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வு கூடத்தில் 240 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## நள்ளிரவு...

இருந்தவர்களை அச்சுறுத்தி நகை, பணம் என்பற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. வீட்டிலிருந்த இருவர் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணிளவில் சுழிபுரம், சங்கக்கடை வீதியில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது.

வீட்டுக்கு வெளியே சத்தம் கேட்டதை அடுத்து, வீட்டில் உள்ளோர் கதவைத் திறந்து பார்த்தனர். அப்போது கொள்ளையர்கள் கூரிய ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி வீட்டிலிருந்த அரைப் பவுண் நகை, 300 அமெரிக்க டொலர், 100 ஆஸ்திரேலிய பவுண்ஸ், 100 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையர்களால் வீட்டில் இருந்த இருவருக்குக் காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-26)

## காய்ச்சல்...

அம்மன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சு.சகானா (வயது-24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இவருக்கு காய்ச்சல், வாந்தி, உடற்சோர்வு என்பன ஏற்பட்டுள்ளன. அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தைரொக்சின் பிரச்சினை காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## மத்திய...

இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுச் சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகின்றோம் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்கு கூட்டமைப்பின் யோசனைகளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று அனுப்பினார். இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் இயங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவற்றின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இந்தக் கருத்துக்களைத் தாம் முன்வைக்கிறேன் எனத் தெரிவித்து சம்பந்தன் நேற்றுக் காலை இந்த யோசனைகளை அனுப்பியுள்ளார்.

21 பக்கங்களைக் கொண்ட இந்த யோசனை திட்டத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

13ஆவது திருத்தத்துக்கு பின்னர் ஏற்படுத்தப்பட்ட அனைத்து யோசனைகளும், இணக்கப்பாடுகளும், வாக்குறுதிகளும் ஒற்றையாட்சியை விடுத்து சமஷ்டிக் கட்டமைப்பிலான ஆட்சி முறையைத்தான் பிரேரித்திருந்தன.

புதியதொரு அரசமைப்பு வரையப்படுமாக இருந்தால் அர்த்தமுள்ள விதமாக அரச அதிகாரங்கள் பகிரப்படுவது அதன் மையப் பொருளாக இருக்க வேண்டும்.

மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு கிழக்கு இருத்தல் வேண்டும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றும் அரச கரும மொழியாக வேண்டும்.

நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடிய சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவியில் இருப்பார். பிரதமரின் ஆலோசனைப்படி அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார். அமைச்சர்களின் அமைச்சுக்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதமரிடம் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய சபையின் அங்கீகாரத்துக்கு அமைய முதலமைச்சர் வழங்கும் பரிந்துரைப்படி ஆளுநர்களை ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

பின்வரும் துறைகளில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்:

காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் கட்டடங்கள், விவசாயமும் விவசாய சேவையும், நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கு வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீள் குடியமர்வும் புனர்வாழ்வும், உள்ளூராட்சி நிர்வாகம், பிராந்திய பொதுச் சேவைகள் மற்றும் கலாசார விடயங்கள், கூட்டுறவு மற்றும் கூட்டுறவு வங்கிகள், தொழிற்சாலைகள், வரி விதிப்பு, மத்திய நிதியளிப்பு, சர்வதேச மற்றும் உள்ளூர் கடன்கள், மானியங்கள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள்.

நீதித்துறையில் அரசமைப்பு நீதிமன்றங்கள் தனியாக இருக்க வேண்டும். பிராந்திய மேல் நீதிமன்றங்களே அடிப்படை உரிமை மீறல் குற்றங்களை விசாரிக்கும் நியாயாதிக்கம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

பிராந்திய முதலமைச்சரின் இணக்கத்துடன்தான் பிராந்தியங்களில் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்படலாம். அது பின்னர் பிராந்திய சபைகளால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

காணி அதிகாரம் பிராந்தியத்துக்குப் பகிரப்பட வேண்டும்.

சட்டமும் ஒழுங்கும் பிராந்தியங்களுக்குப் பகிரப்பட்டமையால் தேசிய பொலிஸ் போன்று ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய பொலிஸ் இருத்தல் வேண்டும்.

இந்த விடயங்கள் அந்த யோசனைத் திட்டத்தில் விரிவாக உள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 பங்காளிக் கட்சிகளின் சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒப்பமிட்டு இந்த யோசனைத் திட்டத்தை அனுப்பிவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-22)

## ஒன்றுபட்டு....

நேற்று திங்கட்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்' எனும் தொனிப்பொருளில், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "தமிழ் அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்கவேண்டும். நாங்கள் எமது குடும்பஉறவுகளுடன் கூடிவாழவேண்டும்" "தொடர்ந்து ஏமாற்றாதே! துரோகம் செய்யாதே" "கைதிகளது உறவுகளின் வலியை புரிந்து கொள்ளுங்கள்"

"சமயத் தலைவர்களே சமூக ஆர்வலர்களே சர்வ கட்சிப் பிரதிநிதிகளே தமிழ் அரசியற் கைதிகளை சிறை மீள குரல் கொடுங்கள்" "கைதிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு. தசாப்தங்கள் கடந்தும் தடுப்பு சிறை தொடர தமிழர் நாம் செய்த பாவம் என்ன?" "எம்முடைய உறவுகளை உயிருடன் சாகடிக்க வேண்டாம்."

" கொரோனாத் தாக்கத்திலிருந்து கைதிகளை பாதுகாக்க வேண்டும். அரசே பாரபட்சம் காட்டாதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், சட்டத்தரணிகள், மதத் தலைவர்கள் உட்படப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். (ஒ-20)

## தீயில்...

கொரோனா தொற்று அபாயம் உடைய கடத்தல் பொருள்களை உடனடியாக தீக்கிரையாக்க வேண்டும் என்ற சுகாதார அமைச்சுச் செயலரின் சுற்றறிக்கைக்கு அமையவே அவை தீக்கிரையாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார், பேசாலை, தாழ்வுப்பாடு, தலைமன்னார் கடல் பகுதிகளில் கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டிகளே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி முன்னிலையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக தலைமையில், பொலிஸ் தடவியல் நிபுணத்துவ பொலிஸார் இணைந்து மன்னார் நகர சபைக்கு சொந்தமான மலக்கழிவகற்றல் நிலையத்தில் அவற்றைத் தீயிட்டு அழித்தனர். (த-இ)

## ரெலோவுக்கு...

அரசுக் கட்சிக்கு வழங்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் கோப்பாய்த் தொகுதிக் கிளை கட்சித் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டது. சபையின் தவிசாளராக இருந்த தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகமூர்த்தி பதவி விலகியுள்ளார். அந்த வெற்றிடத்துக்கு ரெலோ உறுப்பினரை நியமிக்க வேண்டும் என்று அந்தக் கட்சி கோரி வருகின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது நல்லூர் பிரதேச சபையின் முன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சியும், பின்னிரண்டு ஆண்டுகள் ரெலோவும் தவிசாளர் பதவியைப் பெற்றுக் கொள்வது என்ற அடிப்படையில் போட்டியிட்டிருந்தன. அதற்கு அமைவாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ரெலோ கட்சி தெரிவித்திருந்தது. இந்த நிலையில் இதே ஒப்பந்தத்தின் அடிப்படையில் வலி. கிழக்கு பிரதேச சபையில் முன்னிரண்டு ஆண்டுகள் ரெலோக்கும் பின்னிரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சிக்கும் என்று கூறப்பட்டிருந்தன. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தற்போது தமிழ் அரசுக் கட்சியின் கோப்பாய்க் கிளை கோரியுள்ளது. (எ-ஒ-5)

## ஊடக....

விடுத்துள்ளார் கடந்த நல்லாட்சி அரசில் ஊடகத்துறை அமைச்சராகப் பதவி வகித்த மங்கள சமரவீர.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் 'உதயன்' பத்திரிகை மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ். பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிட்டுள்ள வன்மையான கண்டனத்திலேயே முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ராஜபக்சக்களின் ஆட்சிகளில் ஊடக அடக்குமுறைகள் வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்றன. இந்த அரசின் அராஜகங்களை அம்பலப்படுத்தும் ஊடகங்கள் மீதே அடக்குமுறைகள் திட்டமிட்டுப் பிரயோகிக்கப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் 'உதயன்' மீது தாக்குதல் வடிவில் அடக்குமுறைகள் தொடர்ந்தன. தற்போது கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் 'உதயன்' மீது வழக்குத் தாக்கல் என்ற வடிவில் அடக்குமுறை மாற்றமடைந்துள்ளது.

உண்மைகளைச் சொல்வதுதான் ஊடகங்களின் பணி. அதனால்தான் நாட்டின் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்தைக் கூறுகின்றோம். ஊடகம் இல்லாவிட்டால் அரசியல், அரச நிர்வாகம், நீதித்துறை ஆகிய மூன்றிலும் நடக்கும் முறைகேடுகள் வெளி உலகுக்குத் தெரியாமல் போய்விடும். அதனால் நாடு சீரழிந்துவிடும்.

ஜனநாயகத்தையும் நாட்டையும் காப்பாற்ற ராஜபக்ச அரசால் அரங்கேற்றப்படும் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகக் கட்சி பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்றார். (எ-22)

## தமிழருக்கான...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படத்தைப் பிரசுரித்தமை மற்றும் சொற்களைப் பாவித்தமைக்காக "உதயன்" பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக அனுப்பியுள்ள கண்டன அறிக்கையிலேயே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது-

பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் இயல்பான வாழ்க்கையோடும், பல சுமைகளோடும் ஒன்றித்த, பல சரித்திரங்கள் தெரிந்த ஒரு பத்திரிகையாக "உதயன்" பத்திரிகை இருப்பதை உலகம் அறியும். உதயன் பத்திரிகையை அழிப்பதற்கு பேரினவாத சக்திகள் எடுத்துள்ள இன்னொரு வடிவமே இந்த வழக்குத் தாக்கல். பல ஊடகங்களில் இவ்வாறான படங்கள் பிரசுரிக்கப்படும் நிலையில், தமிழ் ஊடகம் ஒன்றின் மீது மட்டும் இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்வது பக்கச்சார்பான நடவடிக்கையாகவும், பழிவாங்கும் நடவடிக்கையாகவுமே கருத வேண்டிருக்கின்றது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. என்றுள்ளது. (எ-இ)

# பிளசிஸ் அபாரம்: தென்னாபிரிக்கா முன்னிலை

இலங்கை தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. 317 ஓட்டங்களுடன் நேற்றைய நாளை ஆரம்பித்த தென்னாபிரிக்கா சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது.

பவுமா அரைச்சதம் கடந்து 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த முல்டர் 36 ஓட்டங்களையும் மகராஜ் 73 ஓட்டங்களையும் பெற்றனர். சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய டூ பிளசிஸ் 199 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். நிறைவில் தென்னாபிரிக்கா அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 621 ஓட்டங்களை குவித்தது. பந்துவீச்சில் அறிமுக வீரர் வனிந்து ஹசரங்க 4 இலக்குகளையும் விஸ்வ பெர்ணாண்டோ 3 இலக்குகளையும் சானக இரு இலக்குகளையும் குமார ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

225 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு ஆரம்பமே சொதப்பலாக அமைந்தது. அணித்தலைவர் கருணாரத்ன 6 ஓட்டங்களுடனும் குசல் மென்டிஸ் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். மூன்றாம் நாள் முடிவில் இலங்கை அணி 65 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்துள்ளது. குசல் பெரேரா 33 ஓட்டங்களுடனும் சண்டிமல் 21 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் இங்டி இரு இலக்குகளை கைப்பற்றினார். (ரி4)

அகரம்
உயர் நிலைக் கல்லூரி
கொக்குவில் மல்லாகம்

தரம் 06 - O/L வரையான
[தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.]

புதிய கல்வியாண்டு - 2021
30.12.2020
காலை 6 மணி முதல் 9 மணி வரையான
புண்ணிய காலத்தில் ஆரம்பமாகின்றது

குறிப்பு
தற்போதைய கோவிட் - 19 சூழ்நிலையை
கருத்திற் கொண்டு zoom மூலமே
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

நன்றி அகரம் நிர்வாகம்

# கொரோனா போர்வையில் தீவிரவாதத்துக்கு நிதியுதவி

## ரஷ்யத் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

கொரோனா நிதியுதவி என்ற பெயரில் இஸ்லாமிய தொண்டு நிறுவனங்களுக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளால் நிதி அனுப்பப்படுகின்றது. இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மட்ரியேட்டி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவைக் கோரியுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலும் ரஷ்யத் தூதுவர் கேட்டறிந்துள்ளார்.

'முன்னைய அரசு பாதுகாப்பு விடயத்தில் அக்கறையின்றியிருந்தது. எமது அரசு புலனாய்வுக் கட்டமைப்பை பலப்படுத்தி விரிவாக்கியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய 267 பேர் கைதாகியுள்ளனர். இவர்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. அறிக்கை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது' என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பதிலளித்துள்ளார். (ஒ,இ)

தேவை

வீட்டுப் பணிக்கு, சமையல் தெரிந்த
பெண் உதவியாளர் தேவை.
(வேலைநேரம் - காலை 8 மணி
தொடக்கம் மதியம் 12 மணிவரை)
T.P:0767374444

# மேலும் 549 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, டிசெ.29

இலங்கையில் நேற்றும் 549 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 603 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 37 ஆயிரத்து 890 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 33 ஆயிரத்து 221 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 188 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# ஜெனரலாகினர் கமால், சவேந்திர

கொழும்பு, டிசெ.29

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோரின் பதவி நிலைகள் ஜெனரலாக உயர்த்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், இவர்களின் பதவி நிலைகள் உயர்த்தப்பட்டுள்ளது.

(எ-22)

அன்பொளி கல்வியகம்

ஆசிரியர் திரு.வே.அன்பழகன்
அவர்களின்
2021 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை
ZOOM
வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன
மாணவர்கள் விரும்பும் வகையில் மகிழ்ச்சிகரமான
கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்றது.
இணைய விரும்பும் மாணவர்கள்
077 306 8 999
தொடர்புகொள்ளவும்.

# சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணம் மாநகர சபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டதுடன், மாநகரசபைக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

மாநகர சபை சுத்திகரிப்பு ஊழியர்களின் நாளாந்த வரவைப் பதிவு செய்யும் கைவிரல் அடையாளப் பதிவு இயந்திரம் பழுதடைந்திருந்தது. எனவே, அதைத் திருத்துவதற்கு ஒவ்வொரு சுத்திகரிப்பு ஊழியர்களதும் மாதாந்தக் கொடுப்பனவில் இருந்து ஆயிரம் ரூபா கழிக்கப்பட்டிருந்தது. அத்தோடு கொரோனாத் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் குருநகர், திருநகர் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை. மேற்குறித்த இரு விடயங்களைக் கண்டித்தே சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இந்தப் போராட்டங்களை மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டங்களில் 300க்கும் மேற்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பங்குகொண்டதுடன், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் தன்னிச்சையாக நடந்து கொள்கிறார் எனவும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ற-25)

# கொரோனா காவு 194

கொழும்பு, டிசெ.29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 194 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 181 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)

## மரண அறிவித்தல்



### சுப்ரமணியம் இரத்தினசபாபதி

(ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்)

காரைநகர் வலந்தலை பண்டித்தாழ்வை பிறப்பிடமாகவும், கொழும்பு லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் இரத்தினசபாபதி அவர்கள் (28-12-2020) திங்கட்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சுப்ரமணியம், இலட்சுமிப்பிள்ளை தம்பதியின் ஏக புத்திரனும், லட்சுமியின் (மணி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மலேசியா நல்லையா, சின்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும் லண்டனில் வதியும் நாகேஸ்வரி (கீதா), புவனேஸ்வரி (சாந்தா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவரத்தினம், சிவசொரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன், ஜீவந்தி, நேத்ரா, விசாகன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆறுமுகம் முருகேசு அவர்களின் உடன்பிறவாபாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

நாகேஸ்வரி (கீதா) - 004 478 940 36225
புவனேஸ்வரி (சாந்தா) - 004 4752 513 2698
தவரத்தினம் (அப்பு) - 004 479 698 29305

தகவல்:
ஆ.முருகேசு
(ஓய்வுநிலை தபாலதிபர்)
077 466 9610

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.